பக்கங்கள் பத்து

Registered as a Newspaper

உதயனுக்கு
எம்
நல்வாழ்த்துக்கள்
ROOTS CONFECTIONARY LTD.
Manufacturers of Quality Sweets & Cordials

# உதயன்

விலை ரூ.1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

ஓராண்டு
நிறைவு காணும்
உதயனுக்கு
எம் இதய
வாழ்த்துக்கள்
ROOTS INTERNATIONAL LTD.

சுடர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஞூ கார்த்திகை மீ 11 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு அவ் பிறை 24 (27-11-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:-1

## உதய வேளையில் உங்களுடன் ...

அன்புசால் எமது வாசகர்களே!

உங்கள் அபிமானத்துக்கு உரிய உதயனுக்கு இன்று முதலாவது ஆண்டு நிறைவு தினம். உங்கள் ஆதரவால் ஒரு வயதுக் குழந்தையாக வளர்ந்துவிட்டான்.

பத்திரிகைக்கு சமூகத்தில் பல பணிகள் உள்ளன. பொறுப்புகளும் பல. அவற்றை உணர்ந்து, உதயன் உங்களுக்குக் கடந்த ஒரு வருட காலமாகத் தொண்டாற்றி வருகிறான்.

நாளின் நாயகனாக இருந்து அன்றுட உலக, உள்நாட்டு, உள்ளூர்ச் செய்திகளை வாசகர்களுக்குத் தரும் அரிய பணியில் உதயன் தன்னை ஒருவருட காலமாக அர்ப்பணித்து வருகிறான். தொடர்ந்தும் அவ்வாறே செய்வான்.

உண்மை, அஞ்சாமை, நடுநிலைமை என்ற கோட்பாடுகளை மனதிற்கொண்டு —

பத்திரிகா தர்மத்தை முழு அளவில் கடைப்பிடித்து, அதற்குரிய நெறிகளைக் கைக்கொண்டு —

மக்கள் படும் கஷ்டங்களையும், துயரங்களையும் துடைப்பதனைக் குறிக்கோளாகக் கொண்டு—

தமிழ் மண்ணின் விடுதலைக்காக, மேம்பாட்டுக்காக, தமிழ் மக்களின் சமய, கலாசார பண்பாட்டு மறுமலர்ச்சிக்காக உழைப்பதையே உன்னத பணியாகக் கொண்டு —

உதயன் கடந்த ஒருவருட காலமாக அயராது உழைத்தான். அவனின் அந்தத் தொண்டு தொடரும்.

இனிவரும் நாட்களில் உங்கள் தேவைகளைப் பெருமளவு நிறைவு செய்யும் வகையிலும்,

சிறப்பான அம்சங்களைத் தந்து உங்களை மகிழ்விக்கும் விதத்திலும்,

அவன் அயராது பாடுபடுவான் என உறுதி கூறுகிறோம்.

தற்பெருமை பேசுவதில் உதயனுக்கு நம்பிக்கை இல்லை. அவனது சேவையையும் திறமையையும் எடைபோடும் நீதிபதிகள் நீங்களே

உங்கள் அன்பும், ஆதரவும், அபிமானமும் உதயனுக்கு உணவுகள். அவற்றை உங்களிடம் நாடிநிற்கும் உதயன், கைமாறாக தழும்பாத தகவல்களையும், சிந்தனையைத் தூண்டும் கருத்துக் கருவூலங்களையும் உங்களுக்கு விருந்துபடைக்கத் தவறமாட்டான்.

ஒருவயதில் எழுந்து நிற்கும் அவனுக்கு நீங்களே பாதுகாவலர்.

உதயனின் வார இதழ் சஞ்சீவி, அறிவுக்கு மட்டுமன்றி, அதன்மூலம் ஆக்கத்துக்கும், எமது மண்ணின் அபிவிருத்திக்கும் பணி புரிவதே சஞ்சீவியின் குறிக்கோள். இலக்கியம், கலை, கலாசாரம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு மட்டுமன்றி நிலவளம், தொழில்வளம் பெருக்கவும் சஞ்சீவி உந்து சக்தியாகத் தொண்டாற்றும். மேன்மேலும் அதன் பணியைச் சிறப்பாகச் செய்ய நாம் காத்திருக்கிறோம்.

உதயன் குடும்பத்தின் மூன்றுவது அங்கத்தவன் அர்ச்சுனா இளைஞர், சிறுவர் அறிவு வளர்ச்சிக்குத் துணைபுரியும் இலக்குடன் மாதாந்தம் மலரும் சஞ்சிகை அது.

பத்திரிகை வர்த்தகம் வெறும் வியாபாரம் மட்டுமல்ல. அது மக்கள் சேவையுமாகும். அதனால்தான் அது நஷ்டம் தரும் தொழிலாக மாறுவதும் உண்டு.

எனினும் வாசகர்களதும், விளம்பரதாரர்களதும், விநியோகஸ்தர்களதும், அபிமானிகளதும் ஆதரவு எமக்குப் பலம் தர வல்லதாகும்.

உதயன் குடும்பம் தனது கடமையைக் கண்ணியத்துடனும், கட்டுப்பாட்டுடனும் உங்களுக்கு தொடர்வதற்கு முருகன் அருளை இறைஞ்சுகின்றோம்.

வணக்கம்.

— நிர்வாகிகள்

### ராஜீவ் ஜே. ஆருக்கு கவன ஈர்ப்பு

# ராணுவ நடவடிக்கை ஆகாது; நிறுத்துக!

## சிதம்பரம் குழு மூலம் எழுத்தில் கையளிக்கப்பட்டது

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, நவம்பர் 27

தமிழர் பகுதிகளில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்வதை நிறுத்த வேண்டும். இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வு காண்பதற்கு இராணுவ நடவடிக்கை ஒருபோதும் ஆகாது.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி, ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு கவன ஈர்ப்புக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

கடந்த திங்கட்கிழமை கொழும்புக்கு விஜயம் செய்த இணை அமைச்சர்கள் (திரு. சிதம்பரம், திரு. நட்வர்சிங்) தூதுக்குழு மூலம் அந்தக் கடிதம் கையளிக்கப்பட்டது

இனப்பிரச்சினைப் பேச்சுக்கள் ஆக்கபூர்வமானதாக அமைய இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும் என்றும் பிரதமர் ஜனாதிபதிக்கு அனுப்பிய செய்தியில் வலியுறுத்தி இருந்தார். இப்படி இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியத் தூதர் டிக்ஸிற் முன்னர் புதுடில்லியில் இருந்து திரும்பியதும் ஜனாதிபதியைச் சந்தித்து இராணுவ நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்ற இந்திய நிலையை வாய்மூலம் தெரிவித்தார். அதைத் தொடர்ந்தே முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டாம் நாளாக அமுல் நடத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் திடீரென்று நண்பகலுடன் விலக்கப்பட்டது.

தமிழ் நாட்டில் தமிழ்ப் போராளி அமைப்புக்கள் மீது எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகளைத் தொடர்ந்து இலங்கை அரசு, இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி வந்தது குறிப்பிடத்தக்கது. (அ-எ-1)

### உயிரிழந்த கொமாண்டோக்கள்

யாழ்ப்பாணம், நவ. 27

திருமலை மாவட்டத்திலுள்ள முள்ளிப்பொத்தானை மினி இராணுவமுகாம் தாக்குதலில் புலிகளினால் கொல்லப்பட்ட மூன்று கொமாண்டோக்களின் பெயர் விபரங்களை புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

கே.எம். செனவிரத்ன பண்டா (கான்ஸ்டபிள் இல. 15148) எஸ். ஜி. ஒமரட்ண((19647) எஸ். எம். விஜயதாச(21462)

இவர்களது சடலங்கள் அனைத்தையும் தாங்கள் எரித்து விட்டதாக புலிகள் அறிவித்துள்ளனர். (உ-10)



உதயனைக் கண்டதும் சூரியகாந்திக்கு மகிழ்ச்சி. உடனே மலர்ந்துவிடுகிறது. உதயன் பக்கம் நாடியே அது எப்போதும் மலரும்.

உதயனன் அன்புக் கரங்களை நாடி நிற்கும் வாசகர்களாகிய உங்களது மகிழ்ச்சியை அந்தப் பூவின் மலர்ச்சியில் காணமுடிகிறது

உங்கள் மலர்ச்சியைக் கண்டு உதயன் என்ற "ஒரு" வயதுக் குழந்தை பொக்கைவாய் திறந்து புன்னகை உதிர்க்கிறான் பார்த்தீர்களா?

அவனைக் கண்டதும் உங்கள் முகம் மலர்வது போன்ற மலர்ச்சியை சூரியகாந்தியில் காண முடிகிறது அல்லவா?

வாசகர்களாகிய உங்கள் மகிழ்ச்சியே உதயனின் மலர்ச்சி அதனை எடுத்துக்காட்டவே இந்தப் படச் சேர்க்கை. பொருத்தம் தானே?

### "குண்டு வெடிக்கும்"

## லலித்தின் அறிவிப்பு: கொழும்பு குழம்பியது!

கொழும்பு, நவ. 27

அமைச்சர் அத்துலத்முதலியின் அறிவிப்பு நேற்று கொழும்பு மாநகரைப் பரபரப்பில் ஆழ்த்தியது.

அடுத்த சில தினங்களில் கொழும்பு மாநகரில் குண்டுகள் வெடிக்கலாம் என்று கடந்த வாரம் அமைச்சர் அத்துலத் முதலி நாடாளுமன்றத்தில் எச்சரிக்கை விடுத்தார்.

இதைத் தொடர்ந்து நேற்று கொழும்பு நகரில் உள்ள பாடசாலைகளில் மாணவர் வரவு குறைந்திருந்தது.

அரச அலுவலகங்களுக்கும் ஊழியர்கள் அவதானமாகவே சென்றனர்.

பஸ்களில் பயணம் செய்தவர்களும் பஸ்களுக்குள் கிடந்த பார்சல்கள் குறித்து அக்கறை காட்டினர். (இ-எ)

### சுபநேரம்

27—11—1986

வியாழக்கிழமை

சுபநேரம்:
7.42 முதல் 9.13 வரை

ராகுகாலம்:
1.42 முதல் 3.12வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### விஜிதரன் விவகாரம்

# இயக்கங்களுடன் பேசுவதற்கு

## வெகுஜன ஸ்தாபனங்களின் விசேஷ குழு

யாழ்ப்பாணம், நவ. 27

விஜிதரன் கடத்தல் தொடர்பாக பல்கலைக் கழக மாணவர்களினால் விடுக்கப்பட்டிருக்கும் கோரிக்கைகளைப் பற்றி போராளிகள் அமைப்புகளுடன் பேசுவதற்கு விசேஷ குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.

பல்கலைக்கழக மாணவர் அமைப்புக் குழுவிலிருந்தும் வெகுஜன ஸ்தாபனங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட குழுவே போராளிகள் இயக்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும்.

சுமார் நாற்பது வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் இக்குழு தெரிவுசெய்யப்பட்டது

இக்கூட்டம் நேற்று நடைபெற்றது

மேற்படி விசேஷ குழு போராளிகள் அமைப்புடன் பல்கலைக்கழக மாணவர்களினால் விடுக்கப்பட்ட ஐந்து கோரிக்கைகள் குறித்தும் மேலும் இரு கோரிக்கைகள் குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தும்.

* பேச்சு, எழுத்து, கருத்து, பத்திரிகைச் சுதந்திரங்களை அங்கீகரித்தல்,
* தாம் விரும்பிய விடுதலை ஸ்தாபனங்களில் இயங்கவோ, அரசியல் நடத்தவோ மக்களுக்கு உரிமையுண்டு என்பதை அங்கீகரித்தல் -இவையே மற்றைய இரு கோரிக்கைகளாகும். (உ)

### பலாலி முகாமில் நிறைமாதக் கர்ப்பிணி இன்று விடுதலையாவாரா?

யாழ்ப்பாணம், நவ. 27

நெடுந்தீவுக் கடலில் வைத்து மூன்று வாரங்களுக்கு முன்னர் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 30 பேரில் ஒருவர் நிறைமாதக் கர்ப்பிணி என தெரிவிக்கப் பட்டுள்ளது.

கொக்குவிலைச் சேர்ந்த இப்பெண்மணி பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவரை விடுவிப்பது சம்பந்தமாக பலாலி இராணுவ முகாம் உயர் அதிகாரி ஒருவர் யாழ் அரசஅதிபரிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார்.

இதனையடுத்து கொக்குவில் பகுதியைச் சேர்ந்த கிராமசேவையாளர் ஒருவர் இன்று பலாலி இராணுவ முகாமுக்குச் செல்கிறார்.

சம்பந்தப்பட்ட கர்ப்பிணிப் பெண் இன்று விடுதலை செய்யப்படலாம் எனவும் தெரிய வருகிறது. (உ-10)

### இனப்பிரச்சினை:

## ரஷ்யாவுக்கு இந்தியாவால் விளக்கப்பட்டது

புதுடில்லி, நவ. 27

இலங்கை இனப்பிரச்சினை பற்றி ரஷ்ய வெளிநாட்டமைச்சருக்கு நேற்று எடுத்துரைக்கப் பட்டது

இந்திய வெளியுறவு இணை அமைச்சர் நட்வர் சிங், ரஷ்ய வெளிநாட்டமைச்சர் ஷெர்ண வான்ட்ஸேக்கு இனப் பிரச்சினையில் இந்தியா எடுத்து வரும் நடவடிக்கைகள் பற்றி விவரித்தார்.

வெளியுறவு அமைச்சர் நாராயண் திவாரியும் சோவியத் வெளிநாட்டமைச்சரும் நேற்றும் பேச்சுக்கள் நடத்தினர்.

இந்தியாவுடன் அதன் அயல்நாடுகளின் உறவுகள் எந்த நிலையில் உள்ளன என்பதை சோவியத் அமைச்சர், இந்திய வெளியுறவு அமைச்சரிடம் கேட்டறிந்துகொண்டார்,

பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு, நேபாளம் இலங்கை ஆகிய நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான தொடர்புகள் பற்றி சோவியத் அமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டது.

அப்போதே இலங்கை இனப்பிரச்சினையின் மிகப் பிந்திய நிலைபற்றி இணை அமைச்சர் திரு. நட்வர் சிங் சோவியத் அமைச்சருக்கு விளக்கிச் சொன்னார்.

இணை அமைச்சர் நட்வர்சிங், சோவியத் தலைவர் கோர்பச்சேவ் புதுடில்லி வந்திறங்கிய அன்று தான் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் பேச்சுக்களை நடத்திவிட்டு கொழும்பில் இருந்து புதுடில்லி திரும்பினார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-எ)

### இலங்கையின் பிந்திய யோசனைகளுக்கு

## புலிகளின் பதில் அர்த்தம் நிறைந்தது என மதிப்பீடு

சென்னை, நவ. 26

இலங்கையின் பிந்திய யோசனைகள் சம்பந்தமான தமிழீழ விடுதலைப் புலிகளின் பதில் அர்த்தமுள்ளவையாகவும் கவனமாகத் தயாரிக்கப்பட்டவையாகவும் அமைந்திருந்தது.

இவ்வாறு 'புரொன்ட்லைன்' இந்திய சஞ்சிகை கருத்து வெளியிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு இணைந்த ஓர் அமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டால் அந்த அடிப்படையில் பேச்சுக்களை நடத்தத் தயாராக உள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்துள்ளது—

இலங்கை அரசின் யோசனைகளை, புலிகள் இயக்கம் ஒவ்வொரு அம்சமாக ஆராய்ந்தே பதிலளித்துள்ளது—

புலிகளின் முக்கிய நோக்கம் தமிழர் தாயகம் என்ற கோட்பாடு வரையறுக்கப்பட வேண்டும் என்பதேயாகும்.—

பிரிவினை வேறு, அதிகாரப்பகிர்வு வேறு. அதிகாரப் பகிர்வு என்ற அடிப்படையில் தான் எந்த அரசியல் தீர்வும் வெற்றிகாண முடியும்.

—இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் இந்திய அரசுக்கு அறிவித்து விட்டனர்.—

இப்படி 'புரொன்ட்லைன்' இலங்கை அரசின் யோசனைகள் சம்பந்தமான தமிழீழ விடுதலைப் புலிகளின் பதில் பற்றிக் கருத்து வெளியிட்டுள்ளது. (அ-எ)

### 9ஆம் நாள்

யாழ்ப்பாணம், நவ. 27

விஜிதரன் காணமல் போனது தொடர்பாக நடைபெறும் பல்கலைக் கழக மாணவரின் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தின் 9ஆவது நாள் இன்று.

முச்சந்தி முனி



அட, இன்டைக்கு உதயனுக்கு முதலாவது பிறந்ததினம் எல்லே! ஓடிப்போய் வாழ்த்து வோம் வாவேன்..!.

## திருக்கோவில் பகுதியில் ஐவர் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு, நவ. 27

திருக்கோவில் பகுதியில் ஆயுதப் படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 5 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கள் மாலை 5 மணியளவில் படையினருக்கும் போராளிகளுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

அதன் பின்னர் ஆயுதப் படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்திலேயே 5 பேர் உயிரிழந்தனர்.

அவர்களின் சடலங்களும் ஆயுதப் படையினரால் எடுத்துச் செல்லப் பட்டன.

அத்துடன் பத்துப்பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். (இ-எ-21)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடத்தப்பட்ட வர்த்தகர்கள் மூவரும் விடுதலை

மட்டக்களப்பு, நவ.27

கடந்தவாரம் மட்டக்களப்பில் கடத்தப்பட்ட 3 பிரபல தமிழ் வர்த்தகர்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

கரவெட்டி வாசியான ராஜேஸ்வரி ஸ்டோர்ஸ் உரிமையாளர் கே. கே. சண்முகம், நாவலப்பிட்டி வாசியான யானை மார்க் சோடாக்கம்பனி உரிமையாளர் கே இராஜேந்திரன், வண்ணார்பண்ணை வாசியான ஆஞ்சநேயர் மரக்காலை உரிமையாளர் எஸ் சண்முகராசா ஆகியோர்தான் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் கோயிலுக்கு கடந்த வெள்ளிக்கிழமை சென்றுவிட்டுத் திரும்புகையிலேயே இவர்கள் இனந்தெரியாதவர்களினால் கடத்தப்பட்டனர். (இ-எ.11)

### மட்டக்களப்பிலும் உண்ணாவிரதம்

மட்டக்களப்பு, நவ.27

காணமற்போன யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரனைக் கண்டுபிடித்துக் கொடுக்கப்படவேண்டும் என்று கோரி மட்டக்களப்புப் பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை ஒருநாள் உண்ணாவிரதம் ஒன்றை நடத்தினர். (இ-எ-21)

### சயரோக தடுப்புச் சங்கம்

மானிப்பாய், நவ. 27

சயரோகத் தடுப்புச் சங்கம் ஒன்று இன்று 27ஆம் திகதி உடுவில் இராமநாதன் கல்லூரியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை உடுவில் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு. தங்கவேலாயுதம் கவனித்து வருகிருர். (இ-90)


வாங்கவும் விற்கவும்

எரிபொருட்களாலும் புதியனவைகளாலும் - பழையவைகளாலும் வாங்கவும்/விற்கவும் தினமும் எம்மை நாடுங்கள். எங்களிடம் புதியனவும் - பழையனவுமாகிய நானாவித பொருட்கள் மலிவு விற்பனைக்கு இருக்கின்றன. லக்கிபெனிபிட் கொம்பனி லிமிட்டட் பொதுச் சந்தை (சந்திக்கருகாமையில்) கோப்பாய்.

விண்ணப்பப் படிவம்

கணித/விஞ்ஞான ஆங்கில ஆசிரியர் பதவிக்கான படிவங்கள் விற்பனையாகிறது தபாலில் பெறுவதாயின் ரூபா 1/50 பெறுமதியான முத்திரையும் சுய விலாசம் எழுதிய நீண்ட கடித உறையும் அனுப்பவும். நாயகபாலன்ஸ்ரோர்ஸ், மானிப்பாய்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

ஓராண்டு பூர்த்தியாகும் உதயன், சஞ்சிவிக்கு எமது நல்வாழ்த்துக்கள்




உள்ளூர் மூலப்பொருட்களை உற்பத்திக்கு எடுப்போம்.
உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கு ஆதரவு கொடுப்போம்.
பிரகாசமான சலவைக்கு சுப்ப மில்க்வைற் சோப்பை வாங்கி உபயோகியுங்கள்.
பாவித்த 2 மேலுறைகளை அனுப்பி மில்க்வைற் செய்தியைப் பெற்றுக்கொள்ளுங்கள்
மில்க்வைற் -- யாழ்ப்பாணம்

WANTED

Applications are invited from suitable persons for the post of Administrative Secretary. Applicants should have had at least fifteen (15) years experience in Office Administration and Personnel Relationship. Terms of employment are negotiable Applications should be sent to the under mentioned address on or before 13th December 1986.

Secretary,
North Lanka
College of Medical Practitioners,
No. 164, 4th Cross Street,
JAFFNA.

விற்பனையாகிறது
பிள்ளையார் கதை
எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
விநியோகஸ்தர்:-
நாயகபாலன் ஸ்ரோர்ஸ்
மானிப்பாய்

Ambalavanar & sons
Dealers in: Electrical Goods & Radios, Paper Merchants, Stationers & Grocers.
APPROVED DEALERS FOR NATIONAL PAPER CORPORATION.
196, K. K. S. Road. JAFFNA.
Phone: 24291 Grams: 'VANARSONS'

உதயனின் ஓராண்டு நிறைவுக்கு
எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்
நத்தார் புதுவருட வைபவத்தை குதூகலமாகக் கொண்டாட
கேக் தயாரிப்புக்குத் தேவையான:-
பிளம்ஸ்
சுஜு
செரிஸ்
கண்டிப்பீல்
ரேசன்ஸ்
கரண்ஸ்
சவ்சவ்
மற்றும் சாமான்களை விசேடக் கழிவுடன் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்-
பெற்ரு எசன்ஸ் சப்ளாயர்ஸ்
223, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தமது ஓராண்டு நிறைவை கொண்டாடும் 'உதயன்' ஸ்தாபனத்திற்கு எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

எஸ். பி. எஸ். ரான்ஸ்போட் சேவிஸ்
தனியார் ஸ்தாபனங்கள், அரசாங்க கூட்டுறவு மொத்த ஸ்தாபனங்களின் பொருட்களையும் மற்றும் தனியாருடைய வெளிநாட்டுப் பொருட்களையும் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கும், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கும் கொண்டுசெல்ல தொடர்பு கொள்ளுங்கள்.
S. P. S. Transport Services
112, டாம் வீதி, கொழும்பு-12
27, விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 20487, 26437

உதயனுக்கு
எமது முதலாவது பிறந்த தின வாழ்த்துக்கள்
ஞானம்ஸ் ஸ்ருடியோ
✶ புகைப்படம் கறுப்பு/வெள்ளை; கலர்
✶ தரமான போட்டோ ஸ்ரற் அடித்தல்
✶ புளக் தயாரிப்பாளர்கள்
301, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். T'P 23067

பிரயாண ஒழுங்குகள்
✶ சவூதி அரேபியா ✶ சிங்கப்பூர்
✶ லண்டன் ✶ ஜேர்மனி

சவூதி அரேபியாவுக்கு தொழில் வாய்ப்புடன் (வருமானத்துடன்) (Open Visa)வில் செல்ல விரும்புவோரை யாம் ஒவ்வொரு வியாழக்கிழமையும் அனுப்பிக்கொண்டிருக்கிறோம். விரும்புவோர் உடனடியாக கீழ்க்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும். (வயது 25 — 35 இடைப்பட்ட ஆண்கள் மட்டும்)

சிங்கப்பூர்: வருமான வாய்ப்புடன் செல்ல விரும்பும் பெண்கள் இவ்வாரத்தில் உடனடியாக கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். (20 வெற்றிடங்கள் மட்டும் உண்டு. இவ்வாரத்தில் மட்டும்) (1) பாஸ்போட் (2) முழு அளவிலான கலர்ப்படம் ஒன்று 6 படங்கள் ஆகியவற்றுடன் தொடர்பு கொள்ளவும்.

வருமான வாய்ப்புடன் செல்லவிரும்பும் ஆண்களும் (வயது 21 - 35) உடனடியாக கீழ்க்காணும் முகவரியில் பின்வரும் சான்றுகளுடன் தொடர்பு கொள்ளவும். (1) பாஸ்போட் (2) 6 படங்கள் (3) தொழில் அனுபவ சான்றிதழ்.

லண்டன், ஜேர்மனி செல்வோரை எமது முகவர் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் கூட்டிச் செல்வார். உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

மு. கு. எமது யாழ் அலுவலகம் சீரற்ற கால நிலைமை காரணமாக மூடப்பட்டிருப்பின் எமது கிளை அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

கிளை அலுவலகம்; 71, குருசோ வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
பிரதான அலுவலகம்: Tri Star Travels றை ஸ்ரார் றவல்ஸ், No. 6, நவீன சந்தை, (மேல்மாடி) யாழ்ப்பாணம். 23813

வே. குகராசா
மயிலியற்புலம் கந்தசாமி கோவிலடி, அராலி வடக்கு

ஓராண்டு நிறைவு காணும் 'உதயன்' நாளிதழுக்கு எமது நல்வாழ்த்துக்கள்!
ஆனந்தா புத்தகசாலை
திருக்குறட் கலண்டர் தயாரிப்போர்
226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
1987-ம் ஆண்டுக்குரிய ஆனந்தா திருக்குறட் கலண்டர்கள் மிகச் சிறந்தமுறையில் தயாராகிவிட்டன.

முக்கிய அறிவித்தல்
தற்போது யாழ்ப்பாணத்தில் நிலவி வரும் நிலைவரம் காரணமாக பொதுமக்கள் நன்மை கருதி எமது ஸ்தாபனத்தின் விற்பனை நிலையம் ஒன்றைக் கீழ்க்காணும் விலாசத்தில் திறந்திருக்கிறோம்.
எஸ் சுப்பிரமணியம் & கொம்பனி
34, ஆடியபாதம் வீதி, நல்லூர் — யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23068
(நல்லூர், கல்வியங்காடு மார்க்கற் சந்தியிலிருந்து நாயன்மார்கட்டுப் பக்கமாக 100 யார் தூரத்தில்)
எமது சகலவிதமான தயாரிப்பு மற்றும் விற்பனைப் பொருட்களும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

உதயனுக்கு எமது நல்வாழ்த்துக்கள் !
J. C. C. உங்களை அன்புடன் அழைக்கின்றது!
வாடகைக்கு
தகரப்பந்தல்கள், இரும்புக் கதிரைகள்
விற்பனைக்கு
சகலவிதமான கட்டிடப் பொருட்கள்
மின்சார உபகரணங்கள், குளியலறைப் பொருட்கள்
உரவகைகள், பெயின்ற் வகைகள், கிருமிநாசினிகள்
புதிய காய்கறி விதைகள், சைக்கிள்கள், சைக்கிள் உபகரணங்கள், மோட்டார் சைக்கிள் உபகரணங்கள்
சகலவிதமான FANCY GOODS, எவர்சில்வர் பாத்திரங்கள், பாடசாலை உபகரணங்கள், கைவேலைப் பொருட்கள் விளையாட்டுச் சாமான்கள், பிளாஸ்ரிக் சாமான்கள் TV அன்ரனு உபகரணங்கள் மற்றும் பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் உற்பத்திப் பொருட்களான கூடைகள், ஜாம், கோடியல், பனங்கட்டி
இன்னும் பல அத்தியாவசியமான பொருட்களுக்கு நாடவேண்டிய ஸ்தாபனம்
J. C. C. நிறுவனம்
உரும்பராய்ச் சந்தி, :-: உரும்பராய்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன் முதல் ஆண்டு நிறைவு சிறப்பிதழ்

## பத்திரிகையின் பணி: பன்முகமானது

மக்களாட்சி மரபின் பொதுசனத் தொடர்புச் சாதனங்களிற் பிரதான இடத்தை வகிப்பது பத்திரிகையாகும். பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குதல் அதனை வெளிப்படுத்தல் ஆகிய மக்களாட்சிக்குரிய கடமைகளை நிறைவு செய்வதோடு மட்டும் அமையாது, மக்களது பண்பாட்டின் பதிவேடு என்ற பணியையும் பத்திரிகை ஆற்றி வருகின்றது. வானொலி, தொலைக்காட்சி ஆகிய சாதனங்களும் இத்தகைய பணிகளை ஆற்றி வருகின்ற போதும், பத்திரிகை போன்றே இவ்வகையில் வலுவுள்ள சாதனமாகத் திகழ்கிறது. சராசரி மனிதனின் அன்றாட வாழ்க்கையின் முக்கிய தேவைகளிலொன்றுப் பத்திரிகை திகழ்கின்றதென்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய வலுவுள்ள சாதனத்தை அதன் ஆற்றலை உணர்ந்து செயற்படுத்தும்போதே அதன் பயன்பாட்டினை மக்கள் சமூகம் நிறைவாகப் பெற முடியும்.

எமது மத்தியில் வெளிவரும் பத்திரிகைகளை மூன்று முக்கிய பிரிவுகளில் அடக்கலாம். முதலாவது வகை தினசரிகள். இவை முக்கியமாகச் செய்தி ஏடுகளாக அமைந்தவை. இரண்டாவது வகை கிழமைதோறும் அல்லது மாதாந்தம் வெளிவரும் கலை இலக்கிய ஏடுகள். இவை பொதுவாகச் சஞ்சிகை என அழைக்கப்படுவன. மூன்றாவது வகைப் பத்திரிகைகள் மக்கள் சமூகத்தின் குறித்த சில சிந்தனைப் போக்குகள், இயக்கப் போக்குகள் என்பவற்றின் களங்களாக அமைபவை. இம்மூவகைப் பத்திரிகைகட்கும் தமக்குக் களமான சமூகத்தின் பண்பாட்டையும் அறிவையும் முன்னெடுத்துச் செல்ல வேண்டியது தலையாய பணியாக அமைகிறது.

தினசரிப் பத்திரிகைகளைப் பொறுத்தவரை அவற்றின் தலையாய பணி செய்திகளைத் திரட்டித் தருதல் ஆகும். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலுமிருந்து கிடைக்கும் செய்திகளை அவற்றின் முக்கியத்துவத்திற்கேற்பப் பிரசுரத்திற்குத் தேர்ந்தெடுப்பதிலும், அவ்வாறு தேர்ந்தவற்றை அவற்றின் முதன்மைக்கேற்ப மகுடம் அமைத்து வரிசைப்படுத்துவதிலுமே தினசரிப் பத்திரிகையின் வெற்றிகரமான செயற்பாடு தங்கியுள்ளது. எந்தச் செய்தியை யாருக்கு எப்படிக் கொடுக்க வேண்டும் என்பதை முடிவு செய்வதிலேயே பத்திரிகையாளனின் மதிநுட்பம் தங்கியுள்ளது. ஒவ்வொரு செய்தியும் வாசகர் உள்ளத்தில் எத்தகைய உணர்வுத் தாக்கத்தை விளைவிக்கும் என்பதை நன்கறிந்து செயற்படுபவனே தரமான பத்திரிகையாளன் ஆகிறான். மேலும் செய்திகளைக் கொடுக்கும்போது அதன் உண்மைத் தன்மை பத்திரிகையாளனின் விருப்பு வெறுப்புக்களாலோ சார்புகளாலோ பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும். பத்திரிகையாளன் தனது சார்புகட்கேற்பச் செய்திகளின் உண்மையைத் திரிபுபடுத்தாத நேர்மையாளனாகத் திகழ்ந்தால் மட்டுமே இது சாத்தியமாகும். யாழ்ப்பாணத் தினசரிகளில் இத்தகைய தரம் நன்கு பேணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

### பண்பாட்டு வளர்ச்சிக் கருத்துக்களம்

கிழமைதோறும் அல்லது மாதாந்தம் வெளிவரும் கலை இலக்கிய ஏடுகளின் தலையாய பணி பண்பாட்டு வளர்ச்சிக்கான கருத்துக்களுக்குக் களமாக அமைவதாகும்.

தகுதிவாய்ந்த படைப்புக்கள், மதிப்பீடுகள், அபிப்பிராயங்கள் முதலியவற்றைத் திரட்டி வழங்குதலே இவற்றின் செயற்பாடாகும். இவ்வகையிற் கலைஞர், சுவைஞர், சிந்தனையாளர் ஆகிய முத்திறத்தாரின் இணைப்புப் பாலமாக இவை அமைவன. இத்தகைய பத்திரிகையின் செயல்திறனையும் பண்பாட்டையும் சிந்திக்கும்போது புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பாடலொன்று நினைவில் வருகிறது

"அறிஞர்தம் இதயஓடை ஆழநீர் தன்னைக் கொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம் செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக் குவலயம் ஓங்கச் செய்வாய்
நறுமண இதழ்ப் பெண்ணேயுன் நலங்காணார் ஞாலங்காணார்"



என்ற அப்பாடல் இதழாகிய (பத்திரிகையாகிய) பெண் அறிஞரது இதயத்தினின்று அறிவு நீரை மொண்டு மக்கள் எண்ணம் செழிக்க ஊற்றும் பணியைப் புரிகிறாள் என்று உருவகிப்பதாக அமைகிறது.

எனவே இத்தகைய பத்திரிகைகள் மக்களது பண்பாட்டைச் சீரழிக்கக்கூடிய மலினமான-ஆபாசமான அம்சங்களுக்குக் களங்களாக அமைதலாகாது என்பது தெளிவாகிறது. தமிழகத்திலே வார இதழ்களாகவும் மாத இதழ்களாகவும் வெளிவரும் ஏடுகளோடு ஒப்புநோக்கும்போது எம் நாட்டு இவ்வகை ஏடுகள் இத்தகுதியிற் சிறந்து நிற்கின்றன என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்ளலாம்.

குறித்த சில சிந்தனைப் போக்குகள், இயக்கப் போக்குகள் என்பவற்றின் களங்களாக அமையும் ஏடுகள் அவ்வச் சிந்தனை, இயக்கம் என்பவற்றின் தளத்தில் நின்று சமூகத்துக்குப் பயன்படவல்லன. செய்திகள், நிகழ்ச்சிகள் என்பவற்றுக்கு அவை அளிக்கும் விமர்சனங்கள், விளக்கங்கள் என்பன வேறுபடினும், அவை யாவும் சமூகத்தை நல்வழியில் முன்னெடுத்துச் செல்வதையே நோக்காகக் கொண்டிருக்க வேண்டியது அவசியம். இவ்வகையில் எம்மத்தியில் இப்பொழுது பல்வேறு ஏடுகள் வெளிவருகின்றன. இவற்றின் தரம், ஆயுள் என்பவற்றை மதிப்பிடக் கால அவகாசம் தேவை.

மேற்படி அம்சங்களைத் தொகுத்து நோக்கினால் மக்கள் சமூகத்திற்குத் தேவையானதும் சரியானதுமான செய்திகளை வழங்குவதும் பண்பாட்டு வளர்ச்சிக்குரிய உயரிய சிந்தனைகளை உருவாக்கி நல்வழியில் இட்டுச் செல்வதும் பத்திரிகையின் பணியாக அமைகிறது எனலாம். எனவே பத்திரிகையாளர்கள் இவற்றை உணர்ந்து செயற்படுவது அவசியமாகிறது

இன்று யாழ்ப்பாணத்திற் பல்லாண்டு வெளிவரும் பத்திரிகை ஈழநாடு ஆகும். அதனைத் தொடர்ந்து ஈழமுரசும், உதயனும் வெளியிடப்பட்டு வருகின்றன. ஒரு பிள்ளை பிள்ளையல்ல என்பதும், ஒரு மரம் தோப்பு அல்ல என்பதும் சான்றோர் வாக்கு இன்றைய

(10 ஆம் பக்கம் பார்க்க)

பேராசிரியர் சு. வித்தியானந்தன்
(துணைவேந்தர் யாழ் பல்கலைக்கழகம்)



கொள்ளையின்பம் குலவு கவிதை கூறு பாவலர் உள்ளத்திருப்பாள்

## உதயன்--ஒரு நோக்கு

உதயன் உதயமாகி ஓராண்டு நிறைவு பெறுகின்றது 27-11-86 ஆம் திகதியாகிய இன்று அவன் தனது முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறான். அவனது வளர்ச்சியை நாள்தோறும் கூர்மையுடன் கண்காணித்து வந்த பல்லாயிரக்கணக்கானோர், சிறப்பாக, அவனின் பிறப்பிடமாகிய யாழ் குடா நாட்டில வசித்து வரும் மக்களுக்கு இது ஒரு நந்நாள்! பெருநாள்!! திருநாள்!!!

இப்பத்திரிகையில், ஏனைய பத்திரிகைகளில் காணப்படாத சில சிறப்பான அம்சங்களை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. நாளைக் காலையில் உதயனைப் பார்த்தால் உண்மை தெரிந்துவிடுமே என்ற எதிர்பார்ப்போடு இருக்கும் எமக்கு, சூரிய உதயத்தைக் கண்டு உயிரினம் புளகாங்கிதம் அடைவது போல் 'உதயன்' கைபட்டதும் ஒரு வித உவகை ஏற்படுகின்றது. அதன் உருவமும் அமைப்பும் ஒரு தனிக்கவர்ச்சியைக் கொடுக்கின்றது. நான்கு பக்கங்களை மட்டுமே கொண்ட ஒரு ஏடாயிருந்த போதிலும், அதில் ஒரு நிறைவு காணப்படுகின்றது. பல்வேறு விடயங்களை இரத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

திருமதி கு. பரராஜசிங்கம்
விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்



ஓராண்டு நிறைவு கொண்டாடும் உதயன் நீடூழி வாழ

எமது

வாழ்த்துக்கள்

ROCK ENGINEERS & CONTRACTORS
IN WATER SUPPLY WORKS

குழாய்க் கிணறுகள்
(மெஷின்மூலம்)

உங்கள் நிலத்தில்

- மண் கண்டமா!
- காவி நீரா!
- கழிக் கண்டமா!
- உப்பு நீரா!
- கற் கண்டமா!
- நீர்போதாதா!

என்ன பிரச்சினை என்றாலும் எம்முடன் கலந்து ஆலோசியுங்கள். மழைகாலம் என்றாலும் தேவையான ஆழத்திற்கு துளைத்து (Drilling) போதிய தண்ணீர் பெற்றுத்தருவோம்
24 மணித்தியாலங்களுக்குள் 24 மணி நேரமும் தண்ணீர் பெறக்கூடிய கிணற்றை அமைத்துத் தருவோம்.
தொடர்பு கொள்ளவும்.

★ றொக் எஞ்ஜினியர்ஸ் ★

பருத்தித்துறை வீதி, கோப்பாய்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன் முதல் ஆண்டு நிறைவு சிறப்பிதழ்

## திரிபலம்



நவாலியூர்
நா. சச்சிதானந்தன்

சொல் நயமும் பொருள் நயமும் அணியும் சிரும்
சுவைக்கின்ற இனிமைசேர் கவிதை சேர்க்கும்
பல் சுவைசேர் அம்சங்கள் அமையும் போதிற்
படிப்பதற்கோர் சஞ்சிகையும் பாங்காய்த்
தோன்றும்
சொற்சுவைக்குட் பொருட் சுவையைப் புகுத்தி
வைப்பின்
அர்த்தமுள்ள நகைச்சுவையும் அங்கு தோன்றும்
சொற்சுவையும் பொருட்சுவையும் இணையும்
பாங்கில்
பத்திரிகை "ஸீரியஸாய்" எழுது தென்பார்
சொற்சுவையும் பொருட்சுவையும் எதிராய்
நிற்பின்
நோய்மிகவும் 'ஸீரியஸ்' தான் யாமென்செய்வோம்?
சொற்சுவை போய்ப் பொருட்சுவை தான்விஞ்சி
நிற்பின்
பத்திரிகைக் கிங்கிதமே தெரியாதென்பர்
பொருட்சுவை போய்ச் சொற்சுவைதான் மிஞ்சி
நிற்பின்
பத்திரிகாதர்ம மங்கு பாழாய்ப் போகும்
பத்திரிகை காலத்தின் நிழற் கண்ணாடி
மா கவிஞன் பாரதியின் வாக்கு ஈது
கண்ணாடி காட்டுமுரு தெளிவாய்க் கண்டு
நரை திரை, தோற்சுருக்கங்கள் மறைக்க ஆங்கு
ஒப்பனையும் சரிவரவே செய்தல் வேண்டும்
பத்திரிகை சமுதாயத்தின் நா என்றிட்டார்
நா காவாக்கால் ஆங்கு சோ காத்தல்தான்
கடுக்காயொடு தான்றிக்காய், நெல்லிக்காயைத்
திரிபலமென்றுரைத்திடுவர் மருத்துவர்கள்
இடம் பொருளோடேவலிவை மூன்றுஞ் சேரப்
பத்திரிகைத் தொழிலதற்குத் திரிபலமாம்
இடம் பொருள் ஏவல் அறிந் தொழுகாவிடிலோ
ஆவினுற் பத்திரிகை உலைத்தோரே
மணியான 'சஞ்சீவி' ஔடதமாம்
மிருத்துஞ் ஜப மந்திரத்தைமேலே சொன்னோம்
மணி, மந்திர ஔடதமிக்குரைத்து விட்டோம்
உதயத்தில் ஒரு வேளை தவறாது
உரைத்துண்டு வாழ்ந்திடுக அவனி மீதே.

## அன்பின் மூலம் மலரும் மனிதனின் நல்வாழ்வு

வாழ்வு வளரவும், வளம் பெறவும், சீர்பெறவும் சிறக்கவும் அன்பும் அறமும் அத்தியாவசியமானவை இதனுண்டுன் போலும் அன்பு இல் வாழ்க்கையின் பண்பெனவும் அறம் அதன் பயனெனவும் அறிவுறுத்தியுள்ளார் வள்ளுவர் அன்போடியைந்த வாழ்க்கை அறநெறிப் பட்டதாக அமையும்.

அன்பு பல கிளைகளையும் விழுதுகளையும் கொண்ட ஆலமரம் போன்றது ஆசை, வாழ்க்கை, பாசம், நேசம், தயை, தாட்சண்யம், புண்ணியம், விருப்பம், இரக்கம், காதல், கருணை, அஹிம்சை, அருள், பக்தி ஆகிய பதங்கள் அன்பின் வெவ்வேறு நிலைகளை விளக்கி நிற்கின்றன

உலக ஆசை சகோதர வாழ்க்கை, புத்திர பாசம், நண்பர் நேசம், உறவினர் விருப்பம், தாயின் தயை, சிவ காருண்யம், கன்னியின் காதல், ஈசன் அருள், கடவுள் பக்தி என்பன அன்பின் வெவ்வேறு நிலைகளை உணர்த்துகின்றன. இவற்றிலிருந்து உடல்-உயிர், உலகு - இறை, தாய் - சேய், காதலன் - காதலி, கடவுள் - அடியார் முதலிய எல்லா உறவுகளுக்கும் அன்பே காரணமாக இருப்பதைக் காண்கின்றோம்.

மனித வாழ்வு அன்பின் மூலமே மலர்கின்றது. மணக்கின்றது இல்லறமாகிய நல்லறம் செவ்வனே நடப்பது காதலன்பால் மன்னரறம் தழைப்பதும், நீதி செழிப்பதும் அவர்களுடைய மக்களன்பால் உலகில் அருளறம் செழிப்பதும் கடவுளிடம் மக்கள் காட்டும் அன்பினாலன்றோ!

அன்பின் ஆற்றல் அளப்பரிது அது குடிசையை மாளிகையாக்கும். கூழை அமுதமாக்கும். இன்னல்களைப் போக்கி, இடர்களைந்து, இன்பத்தை ஏற்படுத்தும்

அன்புடையவர் ஆற்றலுடையவர், அஞ்சாதவர்.

'ஈர அன்பினர் யாதும் குறைவிலா வீரர்' என்பது ஆன்றோர் வாக்கு.

கைம்மாறு கருதாது, புகழையும், பதவியையும் விரும்பாது நாம் எவ்வளவுக்கெவ்வளவு உலகிற்கு உபகாரம் செய்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நம் அன்பு விரிவடையும்.

அனுபூதிச் செல்வர்கள் இறைவனை அன்பே வடிவாகக் கண்டின்புற்றனர். அவர்கள் "கூடும் அன்பினில் கும்பிடவேயன்றி வீடும் வேண்டா விறலினர்" அடியார் கண்ட அன்பு நெறி எமது சமய நெறியாக மலர்ந்தது. எமது சமய நெறி அன்பின் வடிவமாக இறைவனைக் காண்கிறது. அன்பின் வழியாக இறைவனைக் காட்டுகின்றது இதுவே திருமூலர் திருவாக்கு.

"இலங்குமுயிர் உடலனைத்தும் ஈசன் கோயில்" என்ற எண்ணம் ஏற்பட்டால் எல்லா



உயிர்களிடத்தும் அன்பு செய்கின்ற நிலை ஏற்படும். அதுவே உண்மையான அன்பாகும். மன்னுயிரைத் தன்னுயிர் போல் பாவிக்கும் நிலை அடைதற்கு இதுவே சாதனம்

இறைவனை மலரால் அர்ச்சித்த அடியார்களும் உளர் கல்லால் அர்ச்சித்த அடியார்களும் உளர் அறத்திற்கு மாத்திரமன்றி மறத்திற்கும் அன்பே துணை என்ற வள்ளுவர் கூற்று உய்த்துணரத்தக்கது. அன்பு முதிர்ந்த நிலையே அருளாகும்.

மனத்துக்கண் மாசிலனாதல், அனைத்து அறம் என்றார் வள்ளுவர். (அத்தகைய) மனமுடையவர். அனைத்திலும் தன்னையும் தன்னை அனைத்திலும் கண்டு, பயன் கருதாது, பிறருக்குச் செய்யும் நற்கருமமே அறமாகும். மாசுகளை அறுப்பது அறம் நன்றிக்கு வித்தான நல்லொழுக்கத்தைப் பேணி பழி, பாவம் பகை, விலக்கி, உள்ளத்தால் பொய்யாது ஒழுகி வருவது அறமாகும் மேலும் சத்தியத்திலும் உயர்ந்த அறம் இல்லாமையால் மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் பொய்யாது ஒழுகுதலும் அறமாகும்.

அற நெறியில் ஒழுகுதற்கு மன மாசு நீங்க வேண்டும். மனமாசைக் கழுவும் கருவி அன்பாகும் மனமாசற்ற நிலை அறமென்றால், அறத்தை விளங்க வைப்பது அன்பு என்பது வெளிப்படை.

-பரமேஸ்வரி சிவராமலிங்கம்-

## ஒரு முறை சிரியுங்களேன்

"சிரித்துச் சிரித்து என்னை சிறையிலிட்டாய் கன்னம் சிவக்க சிவக்க வந்து கதைபடித்தாய், நினைத்து நினைத்து நெஞ்சில் அடைத்து விட்டாய் பக்கம் நெருங்கி நெருங்கி இன்பக் கவை கொடுத்தாய்"

காற்றினில் கவிஞனின் கவிதை இசையாக மிதந்து தென்றலாய் தாலாட்டியது கவலைச் சுமைகளை அப்படியே கட்டிப்போட்டு விட்டு ஒருமுறை மீண்டும் இதே கவிதையைமீட்டுப்பார்த்தேன் எத்தனை சிரிப்பொலிகள்? கொஞ்சும் சலங்கை ஒலிகளாகக் கேட்டன!

நகைச்சுவையோடு இரண்டறக் கலந்தது இந்தச் சிரிப்பு. அது ஒரு சிறந்த அணிகலன் என்பது அறிஞர்களது கருத்து

சமூகத்துக்குத் தேவையான மிகச் சிறந்த ஓர் ஆபரணமாக இந்த நகைச்சுவையைக் கருதலாம் என்கிறார் தக்கரே என்ற அறிஞர் (Good humour may be said to be one of the very best articles of dress one can wear in society)

நாம் 'சீரியஸ்' என்ற போர்வையை தேவையில்லாத காலங்களிலும் போர்த்திக்கொள்வதால் சிரிப்பை மறந்து போய் விடுகின்றோம்.

### கலைவாணர்

'சிரிப்பு - இதன் சிறப்பைச் சீர்தூக்கிப் பார்ப்பதே நமது பொறுப்பு. சிந்திக்கத் தெரிந்த மனித குலத்துக்கே சொந்தமான வையிருப்பு' என்றார் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்.

என். எஸ். கே. யைப் பற்றி எண்ணும்பொழுது அவரது பலவித நகைச்சுவைகள் மீண்டும் வந்து கவலையைத் துரத்துகின்றன. பலவற்றுள் நினைவிலிருப்பது இது ஒன்று -

அவரது மனைவி மதுரம் அவருக்கு தேநீர் கொடுத்து விட்டு, அவர் பருகிக்கொண்டிருக்கும் பொழுது "ரீ (தேநீர்) எப்படி?" என்கிறார்

கிருஷ்ணன் சொல்கின்றார் 'ரீயே மதுரம்' என்று அதாவது மதுரமான தேநீர் என்று, அது மட்டுமல்ல, மதுரத்தை, T. A மதுரத்தை அந்த ஒரு வார்த்தையில் எவ்வளவு மகிழ்வித்து விட்டார்.

சிரிப்பு, நகைச்சுவை எல்லாம் நமது கவலைகளை மட்டும் மறக்கடிப்பதற்காக மட்டுமல்ல பிறரது கவலைகளையும் போக்க வெகுவாக உதவுகின்றது.

நிலாவைப்பற்றி நினைக்கையில் வானைப்பற்றியும் விண்வெளிபற்றியும் சிந்தனை தொடர்கின்றது. இந்த நகைச் சுவைகளும் இப்போது விண்ணைத் தொடுமளவுக்குப் பரந்து சென்று கொண்டிருக்கின்றன.

அன்று ஒன்று பார்த்தேன்-

"நாம அனுப்பின செயற்கைக்கோளில் ஒரு சின்னக் கோளாறு ஏற்பட்டுப் போச்சு"

"என்ன ஆச்சு?"

விண்வெளியைச் சுத்தறத்துக்குப் பதிலாக நம்ம ஆராய்ச்சி நிலையத்தையே சுத்திச் சுத்தி வருது"

எங்கோ போக வேண்டியது எங்கோ போய்க் கொண்டிருப்பதாகத்



தெரிவிக்கும் இந்த நகைச்சுவைத் துணுக்கு நம்மை எங்கோ கொண்டு செல்கிறது-ஆம், நகைச்சுவை உலகுக்குத்தான்.

க. கணேசலிங்கம்

'எனக்கு நகைச்சுவை உணர்வு இல்லாமலிருந்திருந்தால் எனக்கு எப்பொழுதோ பைத்தியம் பிடித்திருந்திருக்கும்' என்றார் ஓர் அறிஞர்.

'இருக்கண் வருங்கால் நகுக' என்பது வள்ளுவரின் வாய்மொழி

'அரை மடங்கு சாப்பிடு; இரண்டு மடங்கு தூங்கு; மூன்று மடங்கு தண்ணீர் குடி; நான்கு மடங்கு சிரி; நீ பழுத்த கிழவயதுவரை வாழ்வாய்' என்கிறார் ஜோன் ஹாரிங்கெல்லறாக்

நாம் நீண்டநாள் வாழத் துணை புரியும் சிரிப்பை நம் வாழ்நாள் முழுவதும் நம்மோடு வைத்திருக்கக் கூடாதா?

சிரிக்கத் தெரிந்தால் போதும், துயர் நெருங்காது நம்மை ஒரு போதும்! ★

## சிவானந்தர் சொல்கிறார்

உன் உறக்கத்தைக் குறைத்து, அதனால் கிடைக்கும் நேரத்தை உயர்ந்த செயல்களான படிப்பு, தியானம், மக்களுக்குச் சேவை ஆகியவைகளுக்குப் பயன்படுத்த வேண்டும் அப்போதுதான் உன் இலட்சியத்தையடையமுடியும்.

பிறரோடு சிறிதளவு பழகு, சிறிதளவே கலந்து உறவாடு. சிறிதளவு தொண்டு செய், சிறிது ஓய்வு எடுத்துக்கொள்.

சிறிதளவு ஆசனங்களைச் செய், சிறிதளவு பிராணயாமம் செய். சிறிதளவு விசாரம் (சிந்தனை செய், சிறிதளவு தியானம் செய்.

## அர்த்தமே அது தான்!

எந்த ஓர் அலுவலகத்திலும் ஊழியர்கள் அலுவலக நேரத்தில்— சஞ்சிகைகள், பத்திரிகைகள் வாசிக்கவோ; வானொலி கேட்கவோ, தமக்குள் நாட்டு நடப்புக்களை அலசவோ; வீதியில் ஷெல் விழுந்தால் ஓடிச் சென்று 'விடுப்பு'ப் பார்க்கவோ அனுமதியில்லை.

ஆனால் ஒரே ஒரு அலுவலகத்தில் மட்டும் இவை கட்டாயம் செய்யப்பட வேண்டும். அது தான் பத்திரிகை அலுவலகம்

பத்திரிகைத் தொழில் மூலம் பலரின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும். சிலவேளைகளில் எதிர்ப்பும் கிடைக்கும்

நல்ல செய்திகள் பத்திரிகையில் வெளிவராவிடில் வாசகர்கள் தாம் தரும் பணத்திற்கு தரமான ஆக்கங்களைத் தரவில்லையே என ஆதங்கப் படுவர்.

எழுத்தாளரோ தமது ஆக்கங்கள் பிரசுரிக்கப் படவில்லையே என ஆதங்கப்படுவர்.

நாமோ இவர்கள் இருவரிடமும் இடிவேண்டி மிருதங்கப் (பாடு) படுவோம்.

மாமியார் மருமகள் போன்ற இவர்களிருவரையும் சமரசம் செய்யும் மாப்பிள்ளையாக பத்திரிகையாளர், இருதலைக் கொள்ளி எறும்பாய் தவிக்க வேண்டியுள்ளது.

ஆயுதங்களில் சக்தி வாய்ந்தது காகிதங்களில் உழும் பேனா.

அதன் கூர்மையை உணர்ந்தவர்களில் சிலர் நாம் அதை நிரப்புவதற்கு விடும் இரத்த வேர்வையை உணர்வதில்லை. சிலவேளைகளில் பெரும் உயிராபத்துக்களின் மத்தியிலும் நாம் உழைக்க வேண்டிவரும்.

சிலவேளைகளில் நாம் எழுதும் சில செய்திகள் சிறப்பாக அமைந்து எமக்கு சிறப்பை தேடித் தரும். அது எமது உழைப்புக்கு ஊட்டச் சத்துத் தரும் ஒரு 'சிரப்' பாகவும் (Syrup) அமைந்துவிடும்

இந்தவகையில் அண்மையில் நடைபெற்ற ஒரு விழாவில்; முதல் நாள் நிகழ்ச்சியில் ஒருவர் பேசிய சிலவரிகளை மறுநாள் பத்திரிகையில் கட்டம் கட்டி (பெட்டி) வெளியாகியது

'முதல் முதலில் சென்றிக்கு நின்றவர் இராமாயணத்தில் இலக்குவனே' என்பதே அந்தச் செய்தி.

மறுநாள் விழாவுக்குச் சென்றபோது அங்கே எனக்கு ராஜபோக வரவேற்பு காத்திருந்தது நான் மெய் சிலிர்த்துப் போனது மெய்யே.

அதைவிட்டு சந்தோஷப்பட்டாலும், சிறிது சஞ்சலப்பட்டேன். காரணம்; முதல்நாள் போல், மறு இருநாள் விழாவில் ஏதாவது செய்தியை பெரிதாக பெட்டி கட்டிப் போட வேண்டுமே என்ற ஆவல் வந்தது.

சில நிகழ்கால நிகழ்வுகள் எம் நினைவுகளில் எதிர்காலத்திலும் எதிரொலிக்கும்.

'கொத்தலாவலையையும் கிட்டுவையும்' ஒன்றாக அருகருகே பார்த்தபோது மனம் இறங்கியது.

மண்டைதீவு மீனவர்கள் மண்டை பிளக்க சிதறுதேங்காயாய் சிதறிக்கிடந்ததை பார்த்தபோது குருதி உறைந்து போயிற்று.


ஆயுதத்தால் சாதிப்பதைவிட காகிதத்தால் 

(10 ஆம் பக்கம் பார்க்க)

எஸ். ஜே. பி. ரட்ணதுரை

★ உதயனின் ஓராண்டு ★
நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில்
எமது நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

★ International Communication Complex ★
MANIPAY.




மானிப்பாயில்
பாதுகாப்பான சூழலில்
சர்வதேச தொலைத்தொடர்பு நிலையம்
உலகின் எந்தப் பாகத்துடனும் நொடிப் பொழுதில் தொடர்பு கொள்ளலாம்
★ உள்நாட்டு வெளிநாட்டு தொலைத் தொடர்பு
★ ரெலக்ஸ் வசதி
★ இரவு-பகல் எந்நேரமும் சேவை
★ தன்னியக்க மின்பொறிக் கருவிகள் பொருத்தப்பட்ட
ஒரே நிறுவனம்
★ வெளியூர், வெளிநாடுகளிலிருந்து உங்களுக்கு வரும் ரெலக்ஸ் தொலைபேசிச் செய்திகள் உங்கள் வீடுகளில் விநியோகிக்கப்படும்

இன்ரநாஷனல்
கொமினிகேஷன் கொம்பிளெக்ஸ்
282, யாழ்ப்பாண வீதி, மானிப்பாய்.

★ குளிரூட்டப்பட்ட அறைகளில் இதமான சேவை
★ வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர்களுடன் தொடர்பு கொள்ளும்போது இலங்கை நாணயத்தை வீணாக்காமல் வெளிநாட்டு நாணயத்தில் கட்டணம் செலவு செய்வதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான ஒழுங்குகளை நேரில் செய்து கொள்ளலாம்.
★ உங்கள் சேவையே எமது நிறைவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் முதல் ஆண்டு நிறைவு சிறப்பிதழ்

## வீரமரணம் எய்தியவரை கல்லில் உறையவைத்துத் தொழுத தமிழர் மரபு

பண்டைத் தமிழகத்தில் வீரமரணமடைந்த சான்றோரைத் தொழுதற்குரியவராக நடுகற்களிலே உறைய வைத்தனர் தமிழர். சான்றோன் என்னுஞ் சொல் தற்போது நல்லொழுக்கம், நற்கல்வி முதலியனவற்றைக் கொண்டுள்ள ஒருவரைக் குறித்து நிற்கிறது. ஆனால் பண்டைத் தமிழகத்தில் இச்சொல் வீரன் ஒருவனையே குறித்துநின்றது. "ஈன்று புறந்தருதல் ..." என்னும் புறநானூற்று (312)ப் பாடலிலே "சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே" என்னும் அடி இடம் பெறுகின்றது. அதற்கு உரை எழுதிய ஆசிரியர் "தன்குலத்துக்கு ஏற்ப படைக்கலப் பயிற்சியாகிய கல்வி, அதற்குரிய அறிவு, அதற்குரிய செய்கை ஆகிய இவற்றால் நிறைந்தவனாகச் செய்தல் தகப்பனுக்குக் கடமையாம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த நாட்களிலே, போரிலே மடிந்த இச் சான்றோர்களின் உடலைக் கற்குவியலுக்குள் மூடி வைக்கும் வழக்கம் இருந்தது. இக்கற்குவியலை "பதுக்கை" என அழைத்தனர். இக்கற்குவியலுக்கு மேலே நடுகல் அமைத்து, அதிலே அச்சான்றோனுடைய பீடும் பெயரும் எழுதி வைத்தனர். அக்கால இலக்கியங்களிலே இந் நடுகற்கள் பற்றிய குறிப்புக்கள் பரக்கக் காணப்படுகின்றன.

"இந்த உலகத்து மக்கள் துன்பப்பட, வேடிக்...

லாத புகழைச் சூடியதாக நடுகல்லாகிவிட்டான்" கோப்பெருஞ் சோழன் எனப் புறநானூற்றுப்பாடல் (221) கூறுகின்றது. படைமுகத்திலே பகைவருடைய படைக்கு முன்னாலே சென்று அதன் மேற் செலவினைத் தடுத்து நிறுத்தி வீரமரணமடைந்த சான்றோனுக்குக் கல்லமைத்தது பற்றி வேறொரு பாடலிலே பாடப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைக்கப்பட்ட நடுகற்கள் வழிபாட்டுக்குரியனவாயின. இறந்தோரைத் தொழும்

...போன்றவன் நடுகல்லாகிவிட்டான் அக்கல்லைத் தொழாமல் செல்ல வேண்டாம்" எனப் பாணர்களுக்குப் புத்திமதி கூறுகிறார் ஒரு புலவர். சான்றோன் ஒருவன் நடுகல்லாகிவிட்டான். அவனுடைய மனைவி அக்கல்லினைக் கைதொழுது பரவுவதாகப் புறநானூற்றுப் பாடல் கூறுகின்றது.

தொழுதற்குரிய நடுகல்லுக்குப் பலியூட்டி நன்னீராட்டி தீப தூபங்கள் இட்டனர் பண்டைத் தமிழர். நடுகல்லுக்கு ஒவ்வொரு நாளும்

ஒவ்வொரு நாளும் காலையிலே வீட்டிலே செய்யப்பட்ட கள்ளினை அக்கல்லிலே உறையும் சான்றோனுக்கு நாட்பலியாக ஊட்டுகின்றனர். பின்னர் அச்சான்றோன் உறையும் கல்லினை நல்ல நீராலே கழுவி,



நெய் ஊற்றிய தீபம் இட்டனர் அந் நெய்த் தீபத்தின் நறும்புகை

காரஞ் செய்து மதுநிவேதித்ததை ஔவையார்,

"நடுகற் பீலி சூட்டி நாரரி சிறுகலத் துகுப்பவும்......" என்று பாடுகின்றார். நடுகல்லுக்கு மேலே துணியினாலே பந்தர் அமைக்கப்பட்ட செய்தியும் புறநானூற்றிலே கூறப்பட்டுள்ளது.

நடுகல் அல்லது வீரக்கல் எதனைக் குறித்தது? வீரமரணமடைந்த சான்றோர் வீரசுவர்க்கமடைவர் என்பது பண்டைத் தமிழர் நம்பிக்கை. மண் இந்த உலகுக்கும் மேல் உலகுக்கும் எல்லை என்னும் நம்பிக்கை பண்டைக்காலத் தொட்டுப் பல இன மக்களிடையே நிலவி வருகின்றது. பிதிர்களை வானுலகுக்கு வழியனுப்பி வைக்கவும், இவ்வுலகுக்கு வரவேற்கவும் மலை உகந்த தானமாகக் கருதப்பட்டது. கீழ் உலகுக்குச் செல்லாமல் தடுப்பதற்கும் அது உதவும். வீரமரணமடைந்தவர்கள் பாதாளலோகம் செல்லுவதாக நம்பப்படவில்லை. அவர்கள் வானு

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**

வழக்கம் உலகத்திலே சில நாகரிகங்களிலே காணப்பட்ட ஒரு பண்பாட்டுக் கூறாகும் பண்டைக் காலந்தொட்டே தமிழரிடையே இவ்வழக்கம் பின்பற்றப்பட்டு வருகின்றது. "வில்லிலிருந்து எய்யப்பட்ட கொடிய அம்புகளைத் தகைக்கவும், வேகமாக விரைந்தோடி வரும் நீரை விலக்

காலையிலே நாட்பலியூட்டிய செய்தியினைப் புறநானூறு பின்வருமாறு கூறுகின்றது

"இல்லடு கள்ளின் சில்குடிச் சீறூர்ப்
புடை நடு கல்லின் நாட்பலி ஊட்டி
நன்னீர் ஆட்டி நெய்ந்நறைக் கொளீஇய
மங்குல் மாப்புகை மறுகுடன் கமழும்."

சிறிய கிராமங்களிலே கூடக் கல்லினைக் கைதொழும் வழக்கம் காணப்பட்டது. ஒவ்

வீதிகளெங்கும் கமழுகின்றது. அதிகைமான் நெடுமானஞ்சிக்கு எடுத்த நடுகல்லுக்கு அலங்

## 45 வருடங்களுக்கு முன்

### நான் வெளியிட்ட முதலாவது நூல்

ஒரு நூலை வெளியிட்டுப் பார்க்க வேண்டுமென்று உங்களுக்கு விருப்பமிருக்கிறதா?

நல்லது.

ஆரம்பத்திலேயே பெரிய நூல் எதுவும் வேண்டாம் சிறிதாக— சின்னஞ்சிறிதாக ஒரு

**வரதர்**

நூலை வெளியிட்டுப் பார்க்கலாம் சிறிய நூல் என்பதால் நாவலோ, குறுநாவலோ கூட வேண்டாம். சிறுகதைத் தொகுப்பும் பெரிதாகிவிடும். எனவே, ஒரு சிறு கட்டுரையை நூலாக்குவோம்.

கிறவுண் 1/8 (7''X5'') அளவில் 32 பக்கங்கள் போதும். கடதாசியும் நியூஸ்பிரின்ட் கடதாசி தான் ஏற்றது ஏனெனில் அதுதான் மலிவானது (அது கூடச் சென்ற மாதம் ஒரு றீம் 250

ரூபாவாக இருந்தது. இப்போது 325 ரூபாவுக்கு மேல் போய்க் கொண்டிருக்கிறது!)

எங்கள் நூலுக்கு மேலட்டையை மட்டும் அழகாக ஆர்ட் பேப்பரிலே போடுவோம்



(சிக்கனம் கருதி அதற்கும் புளொக்' ஒன்றும் வேண்டாம்)

இந்த நூலில் எத்தனை பிரதிகள் அச்சிடலாம்?

ஒரு வெளியீட்டாளரிடம் போய் யோசனை கேட்டால் அவர் 2000 பிரதிகளுக்குக் குறைவாக அச்சிடுவது மகாபாவம்' என்பார் ஆனாலும் எங்கள் கையைக் கடிக்காமலிருக்க வேண்டுமெனபதற்காக ஐந்நூறு பிரதிகள் மட்டுமே அச்சிடுவோம்.

ஓர் அச்சகத்திற்குப் போய், கிறவுண் 1/8 அளவு 32பக்கம் நியூஸ்பிரின்ட் கடதாசி மேலட்டை மட்டும் ஆர்ட் பேப்பர் - இப்படி 500 பிரதிகள் அச்சிட்டுத் தர எவ்வளவு செலவாகும்' என்று விசாரிக்கிறோம்.

அவர் ஏதேதோ கணக்குகள் போட்டுப் பார்த்துவிட்டு "ஐந்நூறு பிரதிகள் அச்சிட ரூபா 2000 ஆகும். அது உங்களுக்கு

> இப்போதைய இத்தனை அரசியல், பொருளாதார பிரச்சினைகள் மத்தியிலும் யாழ்ப்பாணத்தில் வெகுவேகமாக நடந்து வருவன நூல் வெளியீட்டு விழாக்கள். வாரத்தில் ஆகக் குறைந்தது நான்கு புதிய நூல்களாவது வெளியிடப்படுகின்றன.
>
> நூல் வெளியிடுவதில் உள்ள தனது அனுபவத்தை விவரிக்கிறார் பழம்பெரும் எழுத்தாளரும் பதிப்பாசிரியருமான வரதர்
>
> புதிதாகப் புத்தகம் 'போடுபவர்கள்' நிச்சயம் படிக்க வேண்டியது.
>
> — பிரதம ஆசிரியர் —

லகு செல்பவர்கள். எனவே, மலையாகப் பாவனை பண்ணக்கூடிய கல்லிலே அவர்களை வைத்தனர் பண்டைத் தமிழர்.

அவர்கள் வானுலகு செல்லவும், தொழும் உறவினர் நண்பர்களுக்கு அருளுதற்கு இவ்வுலகு இறங்கவும் அக்கல், மலை போல வாய்ப்பானது எனப் பண்டைத்தமிழர் நம்பியிருக்கலாம்

அச்சகத்தாரிடம் கேட்டால் குறைந்தது ஆயிரம் பிரதிகளாவது அச்சிடுவதுதான் நல்லது என்பார். அனுபவமுள்ள

நட்டம் 1000 பிரதிகள் அச்சிடுவீர்களானால் ரூபா 2600 தான் ஆகும். 1000 பிரதிகளையே அச்சி

(6 ஆம் பக்கம் பார்க்க)





# பூச்சிநாசினி

மனிதருக்கு நச்சுத்தன்மை குறைந்த பரந்து செயலாற்றும் பூச்சி நாசினி:-
நெல், மிளகாய், வெண்காயம், புகையிலை, மரக்கறி,
உருளைக்கிழங்கு போன்ற பயிர்களில் பூச்சி புழு மற்றும் வேரி எறும்புகளையும் கட்டுப்படுத்தும்,

| | |
|---|---|
| 100 மி.லி. | - ரூ. 55/- |
| 200 மி.லி. | - ரூ. 98/- |
| 500 மி.லி. | - ரூ. 215/- |
| 1 லிட்டர் | - ரூ. 420/- |

ANGLO-ASIAN AGRO CHEMICALS

அங்லோ-ஏஷியன்
பேர்ட்டிலைசர்ஸ் லிமிட்டட்,
சாற்றரட் வங்கி கட்டிடம், கொழும்பு-1.

* அமெரிக்க டௌ கெமிகல் ஸ்தாபனத்தாரின் வர்த்தக சின்னம்.


## சஞ்சீவி ★★ ஒரு நோக்கு

யாழ்ப்பாணத்தின் பிரதேச தினசரியாக, மூன்றாவது தினசரியாக உதயன் தினசரி 27- 11- 1985 ஆம் திகதி வெளிவந்தது. பிரதேசப் பத்திரிகைகளாக இன்று வெளிவரும் ஈழநாடு (1959) ஈழமுரசு (1984) இரண்டும் வாரப் பத்திரிகைகளாகமலர்ந்து தினசரியாக வெளிவந்தவையாகும் ஆனால் 'உதயன்' தினசரியாகவே வெளி வந்தது. சனி தோறும் 'சஞ்சீவி' என்ற பெயரில் வாரமலரை 25 - 1 - 86 அன்று அறிமுகப்படுத்தியது.

'சஞ்சீவி 44' இதழ்கள் வெளிவந்துள்ளன. இன்று சஞ்சீவியை சுமார் 15 ஆயிரம் மக்கள் பணம் கொடுத்து வாங்கிப்படிக்கிறார்கள் இவர்களிடமிருந்து பெற்றுப் படிப்

### புத்தொளி

போர் ஆகக்குறைந்தது ஒரு லட்சத்துக்குமேல் என்று எண்ணலாம். சஞ்சீவி முதல் இதழில் "சிறைப் பறவைகள்" என்ற குறுநாவல் வெளிவர ஆரம்பித்து பத்து வாரங்களாக வெளிவந்தது. 1965ல் சிறுகதை எழுதி இன்றும் இடைவிடாது சிறுகதை குறுநாவல் என எழுதிவரும் திரு தி வைத்திலிங்கம் இதனை எழுதினார்.

ஈழவிடுதலை, சீதன ஒழிப்பு, சாதி ஒழிப்பு, வர்க்க பேத அபவாதம் என்பவற்றைச் சுற்றி, ஒரு கிராமத்தில் இக் குறுநாவல் சுற்றிச் சுழன்று வருகின்றது. சஞ்சாதி சஞ்சலனை கனசபை பணத்தைத் தெய்வமாக மதித்துத் தன் பிள்ளைகளை வஞ்சிப்பதையும் அவரது மகன் தனது நாட்குறிப்பில் "வீட்டிலும் சிறை, நாட்டிலும் சிறை, வென்றிடுவோம் இதை" என எழுதியிருப்பதையும் படிப்போர் இந்நாவலின் கரு. உயிர் இது தான் என்ற முடிவுக்கு வருவர். சிக்கல் மக்கள், பிச்சல் பிடுங்கல் விற்றிப் பின்னப்பட்ட ஆனால் தெளிவான நடையுடன் எம்மை ஈர்த்துச்

செல்லும் இந்நாவல் திரு. வைத்திலிங்கத்தின் ஆளுமையைப் பிரதிபலிப்பதாக உள்ளது.

இந்நாவல் முடிவடைந்ததும் முற்போக்கு எழுத்தாளர் அணியைச் சேர்ந்த, மணிவிழாக் கண்ட திரு எஸ். அகஸ்தியரின் இரு மாதக் குறுநாவல் 3 5 86 இல் சஞ்சீவியில் வெளிவரத் தொடங்கியது.

தான் நீண்டகாலம் வாழ்ந்த மலையகத்தின் வாழ்க்கையிலே, மண் வாசனை என்பவற்றைப் பிரதிபலிக்கும் நல்ல நாவலாக இதனைச் சித்திரித்துள்ளார் மலையக மக்களின் பேச்சு வழக்கு, தோட்டத் தொழிலாளர் படும் கஷ்டங்கள் பெரிய உத்தியோகத்தர் வஞ்சிப்போர் அன்றாடம் செய்யும் சில அநாகரீக சம்பவங்கள்



இடம் பெற்றுள்ளது மலையகத்தை விட்டு வந்து ஆறு ஆண்டுகளின்பின் இந்நாவலை எழுதிய திரு அகஸ்தியர் தான் வாழ்ந்த மண்ணை மறக்காத நன்றியுணர்வுள்ளவராகக் காணப்படுகிறார். திரு. வைத்திலிங்கத்தின் நாவல் யாழ்ப்பாணக் களத்திலும், திரு. அகஸ்தியரின் நாவல் மலையகக் களத்திலும் எழுதப்பட்டு வாசகரை இருவேறு சிந்தனைகளை உய்த்துணரவைத்துள்ளது சஞ்சீவி இக் குறுநாவல் முற்போக்குக் கருத்துக்கள் செறிந்துள்ள முற்போக்கு முத்திரை குத்தப்பட்ட அசல் படைப்பாகும்.

'திக்கவயல்' என்ற புனைபெயரில் எழுத்தாளர் தர்மகுலசிங்கம் 'வடக்கே போகும் ராமஜூஜம்' நகைச்சுவைக் கட்டுரைத் தொடரை எழுதி நம்மவர் தமிழகம் சென்று வியாபார

நோக்குடன் செய்யும் செயல்களை அம்பலப்படுத்தினார் ராமனுஜத்தில் மிகக்குறைந்த செலவில் தமிழகம் சென்று வந்தோர் இதனைப் படிக்கும் போது ராமனுஜம் மீண்டும் ஓடுவது எப்போது என அங்கலாய்க்குமாறு இத்தொடரில் சித்திரிக்கப்பட்டிருந்தது. சமீபகாலத்தில் நல்ல பல கட்டுரைகளை எழுதி வரும் 'திக்கவயல்' கட்டுரைகள் எழுதுவதை நிறுத்தக்கூடாதென்பதே எனது கருத்தாகும்

நல்லைநகர் நாவலருக்குப்பின் நம்மிடையே வாழ்ந்து சமீபத்தில் இறைவனடி சேர்ந்த பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் வாழ்க்கை வரலாற்றையும் அவர் வாழ்ந்த சுற்றுப்புறச் சூழலையும் சரித்திரம், இதிகாசம், இலக்கியம் இவற்றிலெல்லாம் ஆழ்ந்த அறிவுள்ள அறிஞர் திரு க சி. குலரத்தினம் எழுதிவருகிறார். பண்டிதமணியின் மாணாக்கரான இன்றைய ஆசிரியர்கள் இத்தொடரை விரும்பிப்படிக்கிறார்கள் இக்கட்டுரை காலமுணர்ந்து எழுதப்படும் ஒன்றாகும்.

எஜலை மோகனச் சிறப்புடன் எழிலதமிழில் எழுதும் திரு ம க. அந்தனிசில் யாழ்ப்பாணம் கடற்கோட்டையின் சரித்திர சம்பவங்களை அள்ளித் தருகிறார் பலகாலமாக எழுதாதிருக்கும் மாகாணத்தில் சரித்திரையும் திரு அந்தனிசில் — இன்றைய தேவை ஒன்றை இந்த வரலாற்றுக் கட்டுரை மூலம் காட்டிக்காட்டுகிறார். தமிழ் மக்களின் சரித்திர வரலாற்று நூலோ நாவலோ எழுதப்படும் தேவை இன்று முக்கிய தேவையாகும் அந்தக்குறையைப் போக்கும் விதத்தில் காலமறிந்த 'சஞ்சீவி' திரு அந்தனிசிலின் கட்டுரையைப் பிரசுரித்து வருகிறது.

'சஞ்சீவியில்வெளிவந்த 'பெண்ணின் வாழ்' திகைபிரபல பெண் எழுத்தாளர்கள், ஆண்கள் பல்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன் முதல் ஆண்டு நிறைவு சிறப்பிதழ்

## சிறப்புச் சிறுகதை

# நிதர்சனங்கள்

## து. வைத்திலிங்கம்

காலை இளம் சூரியனின் பொற்கதிர்கள் பொன்னொளிர் கடற்பளபளக்க வைத்தன. மினிபஸ் ஒன்று ஆடி அசைந்து வந்து சந்திக்கு வருப்பொழுதே முற்றாக நிறைந்து காணப்பட்டது.

தூரத்தில் பஸ் வருவதைக் கண்டதும் நீண்ட நேரமாகக் காத்து நின்றவர்கள் பரபரத்தனர். யாழ்ப்பாணம் செல்லவேண்டிய பஸ் அது. கார்த்திகேசு தன் சட்டைப் பையை தடவிப் பார்த்துக்கொண்டார்.

கையில் இரண்டு சாப்பாட்டுத் தங்களைக் கண்டவிட்ட அரைக்குடை ஓர் ஊதிய அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை, முதல்நாள் தபால் கந்தோரில் எடுத்த இம்மாதத்திற்குரிய பென்சன் ரசீது பணம் இருநூறு ரூபாய் எல்லாம் ஓர் என்வெலப்பில் வைக்கப்பட்டு அவரது சட்டைப்பையில் அடக்கமாய் இருந்தது.

ஒரு திருப்தி மனதில்!

யாழ்ப்பாணம் வரைக்கான கட்டணத்தை சில்லறையாய் கையில் பொத்தி வைத்துக்கொண்டார். மினிபஸ் நின்றதும் பிரயாணிகள் முண்டியடித்துக்கொண்டு ஏறினார்கள். கார்த்திகேசுவும் இந்த வண்டியை விட்டால் இன்று பேனபாடில்லை என நினைத்துக்கொண்டு அவசரமாக ஏறினார். கால் செருப்புத் தடக்கியது. கால்விட்டு அரைவாசி கழன்றுவிட்டது.

"என்னாறும்!" - மனதுக்குள் கூறிக்கொண்டே ஒருமுறை கீழே குனிந்து பார்த்து செருப்பை சரியாக மாட்டிக்கொண்டு ஏறினார். இவரின் கணநேரத் [illegible] பின்னால் நின்றவரின் வேகத்தைக் கட்டுப்படுத்தியது. இதற்குள் அவரது மூக்குக் கண்ணாடி தளர்ந்து கீழே இறங்கியது. அதைநேராக்கினார்.

"என்ன பெரியவர்! கெதியிலை ஏறுமன்! இப்ப தான் கண்ணாடியை முடி வடிவு பார்க்கிறியள்! உதுகளை வீட்டிலை போய் பாருங்கோ. மற்றவையும் ஏற வேணும்...!"

— கண்டக்டர் சலிப்புடன் கூறினார்.

கார்த்திகேசுவுக்கு மனதுக்குள் ஆத்திரம்தான். ஆனாலும் என்ன செய்வது? வந்த கோபத்தை அடக்கிக்கொண்டார். கோபிப்பதில் பிரயோசனமில்லை எனவும் ஒருகணம் நினைத்தார். இருக்க இடம் கிடைக்கவில்லை. மேலே கம்பியைப் பிடித்துக் கொண்டு நின்றார்.

வழமைக்கு மாறாக இன்று பிரயாணிகள் அதிகளவு காணப்பட்டனர்.

இரவு முழுவதும் நாலா பக்கத்தாலும் ஒலித்த பீரங்கி வேட்டுச் சத்தங்கள் பஸ் ஓட்டங்களைத் தாமதப்படுத்தியிருந்தது. முன்பு எல்லாம் பீரங்கி முழக்கம் ஷெல் அடியின் அதிர்வுகள் துப்பாக்கி வேட்டுக்களின் சப்தங்கள் மக்கள் மனதில் கிலியை ஏற்படுத்தி நடமாட்டங்களைக் கட்டுப்படுத்தின. ஆனால் இப்பொழுதோ எல்லாம் பழக்கமாய் விட்டன.

மக்களை அவர்கள் அறியாமலே ஒரு 'வியட்நாமியத் தன்மை' பற்றிக்கொண்டது.

மூளாய் ஆண்பக்கிரி இறங்குங்கோ...

கண்டக்டரின் குரல் பெரிதாக ஒலித்தது. கார்த்திகேசுவுக்குப் பரம சந்தோஷம். 'ஆஸ்பத்திரியடியில சனங்கள் இறங்கினால் இருக்க இடம் கிடைக்கும்'— தனக்குள் சொல்லிக் கொண்டார். அவரின் எதிர்பார்ப்பு வீண்போகவில்லை. இறங்கியதைக்கு இரட்டிப்பாக பிரயாணிகள் ஏறினார்கள். நின்றபடியே எழும்பப் பார்த்துக் கொண்டிருந்த கார்த்திகேசுவுக்கு ஒரு சீற் கிடைத்தது. பரம ஆனந்தத்துடன் அமர்ந்து தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டார். ஏறும் பொழுது கண்டக்டர் மேல் ஏற்பட்ட கோபம் இப்போ தணிந்து விட்டது. திரும்பிப் பார்த்தார்.

பின் சீற்றில் இருந்தவர் அவருக்குத் தெரிந்தவர்தான் ஆலடி மயில்வாகன வாத்தியார்.

ஓ! நீங்களும் இருக்கிறியளே!' கார்த்திகேசு சிரித்தபடியே கூறினார்.

ஓமோம்! இன்டைக்குப் பென்சன் அல்லே!' மயில்வாகன வாத்தியார் கூறினார்.

இரண்டு பேரும் முன்பே பழக்கமானவர்கள்தான். ஆனால் இப்போ கொஞ்சக் காலமாய் கோட்டைக்குப் பென்சன் எடுக்கப்போய் மிச்சம் நெருங்கிய நண்பர்களாகிவிட்டனர்.

மினி பஸ் வண்டியின் வேகம் அதிகரித்தது.

'சித்தன்கேணிச் சந்தி...!'

— மறுபடியும் இறங்கலும் ஏறுதலும்

உத்தியோகக்காரர்கள், பாடசாலை மாணவமாணவிகள், வியாபாரிகள், பெண்கள், வாலிபர்கள் வயோதிபர்கள் இத்தியாதி..இத்தியாதி... ஒரு கலவையான கூட்டம்

சாரதி ஓர் உற்சாகத்துடன் ரேப் ரெக்கோடரை முடுக்கி விட இளையராஜாவின் குரல் கிணுகிணுத்தது. இளவட்டங்கள் இரண்டு ஏதோ சொல்லிக் கண்ணைச் சிமிட்ட, இரண்டு குமரிகள் நீரில் கல் வீழ்ந்து தெறித்தாற்போல் களுக்கென்று சிரித்தனர்.

கார்த்திகேசு நன்றாகக் கவனித்தார்.

'இந்தக் காலத்துப் பெடியன்கள் துணிஞ்சவங்கள்! எல்லாத்திலும் முன்னுக்குத்தான் நிற்கிறாங்கள்!'

இருந்தாற்போல் அவரின் மனதில் ஒரு மின்வெட்டு.

முப்பத்தைந்து வருடங்களுக்கு முன் கொழும்பில் வேலைக்குச் சேர்ந்த நேரம்; கொட்டாஞ்சேனையிலிருந்து கோட்டைக்குப் போகும்போது தினமும் ஒரேநேரத்தில் ஒரே இலக்க பஸ்ஸில் சகபிரயாணியாக வரும் நவநாகரீகமான ஒரு சிங்களப் பெட்டைக்கு, ஆசையில் அவளது தோளில் சாடையாக தட்டப் போய், அவள் முறைத்த முறைப்பு இன்றும் கண்ணுக்குள் நிற்கிறது.

'தொடயா!'' - அவளின் கோபம் கலந்த சொல் இன்றும் காதில் கேட்கிறது. கந்தோருக்குச் சென்று அவரோடு நல்லாய் பழகிய ரணதுங்காவிடம் அந்தச் சொல்லுக்கு தமிழ் அர்த்தம் கேட்டு- தொடயா- என்றால் பட்டிக்காட்டான் என்றறிந்து தான் அசடு வழிய நின்றதை இப்ப நினைத்தாலும் வெட்கமாய் இருந்தது. பின்பு கார்த்திகேசு மிகவும் கவனம்!

இந்தக்காலத்துப் பெடியன்களின் மேல் ஓர் அர்த்தமில்லாத கோபம் இப்பொழுது ஏற்பட்டது!

'போகட்டும்! அவன்கள் என்னவாகிலும் செய்யட்டும்! இன்டைக்குப் பென்சன் எடுத்ததும் மறக்காமல் பிறஷர் பில்ஸ், வின்ரோலின் 'பிறிட்டோன்' எல்லாம் வாங்கவேணும்! என்னென்டாலும் ரவுணிலை சாமான் வாங்கிறமாதிரி வராது!'' மனதுக்குள் சொல்லிக் கொண்டார்.

நேற்று இரவே இன்று ரவுணில் வேண்ட வேண்டிய பொருட்களை ஒரு பட்டியலாக ஒரு சிறிய கடதாசியில எழுதி வைத்திருந்தார்.

'பிறஷர் பில்ஸ் வெளியில ஒரு ரூபா அறுபது சதம்! கிளினிக் டேக்கு இன்னும் ஒரு கிழமை கிடக்கு! கண்டறியாத ஷெல் அடியால் போன கிளினிக் டே அன்று போகவில்லை அப்படி என்றால் ஒரு இருபது பில்ஸ் வாங்குவம்! அவ[illegible] வின்ரோலினும் வேணும் [illegible] ஒரு இருபது பில்ஸ் வாங்கவேணும்!' தனக்குள் கூறிக் கொண்டார்.

அவள் என்றது அவரது மனைவி சொர்ணம் ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் என்றால் மழையும் பனியும் சேர்ந்து ஆஸ்துமா நோயை 'எவர் ரெடியாய்' தோற்றுவிக்கும்.

காலையில் புறப்படும் போதே அவரது பேத்தி 'தாத்தா இன்டைக்கு கண்டோஸ்...' என்றாள். ஒவ்வொரு பென்சன் தினத்தன்றும் அவள் கேட்கும் கோரிக்கை அது அவரும் மறக்காமல் வேண்டிக் கொண்டு போவார்.

''குடையும் மிச்சம்பழுதாய் போச்சு...! சாய்... இந்த மாதம் விடுவம்! வாற மாதம் பார்ப்பம்! நல்லதாய் ஒரு நாலுமுழ வேட்டி கட்டாயம் வாங்க வேணும். இந்த முறை தீபாவளிக்கும் ஒண்டும் எடுக்கவில்லை. இனி திருவெம்பா வருகிறது! கோயில் குளத்துக்குக் கட்டத் தேவை தானே! இப்ப வாற இஞ்சத்தை வேட்டியளும் ஒரு அலம்பல் வேட்டி! முந்தி என்டால் கொழும்பிலை செட்டியார் தெருவிலை இந்தியாக்காறற்றை கடையிலை எட்டுமுழம் நாலுமுழம் வேட்டியள் வாங்கினால் வரியக்கணக்கிலை நிண்டு பிடிக்கும்.

எல்லாம் ஒரு காலம்...! என்ன மாதிரிச் சீவியம்? எல்லாம் பழுதாய் போச்சு! சாய், முந்தி வெள்ளவத்தையிலை சமறியிலை சாப்பாடு... முக்கி முக்கி மாதம் நாற்பது ரூபாய்தானே! மாதத்திலை இரண்டு படம்! பதினைந்து ரூபாவுக்கு நல்ல வெள்ளைக் களிசானும் செக்கி சேட்டும்...!''

கார்த்திகேசு பழைய நினைவுகளில் மூழ்கி அசைபோட்டார்.

மினிபஸ் ஓடுகிறது.

'சண்டிலிப்பாய்ச்சந்தி...!'

அவரது சிந்தனையைக் கலைத்தது கண்டக்டரின் சப்தம் பிரயாணிகள் ஏலிபுளியாய் நசுங்கினர். பஸ் நிறைந்து வழிந்தது. இரண்டொருவர் கார்த்



திகேசுவின் பக்கத்தில் உராய்ந்து நின்றனர்.

முந்தி என்டால் கொழும்பிலைதான் பிக்பொக்கற்காறர்! இப்ப இஞ்சையும்...!' முன்பு மருதானையிலும் பொறளைச் சந்தியிலும் இரண்டு முறை பணத்தைப் பறிகொடுத்த கசப்பான அனுபவம் அவருக்கு மனதில தட்டுப்படுகிறது

'இஞ்சை என்னத்தை குறைஞ்சவங்கள்...? எல்லாத்திலையும் தான்...!' கசப்போடு தனக்குள் சொல்லிக் கொண்டார்

இருந்தாற் போல் எதிரே ஒரு மினிபஸ் வர இந்த வண்டி நின்றது சாரதி தலையை நீட்டினார். 'என்ன மச்சான் போகலாமே...?' எதிரே வந்த சாரதியைக் கேட்டார்.

பிரயாணிகளின் காதுகள் கூர்மையாயின

'அங்கே ஒரே ஷெல் அடி நடக்குது! சிவன் கோயிலடி மட்டும் போகலாம்! கூறிவிட்டுத் தன் வண்டியை நகர்த்தினான். பிரயாணிகள் நீட்டிய தலையை உள்ளே இழுத்துக் கொண்டனர் அவர்களது மனதில் ஒருவித அமைதி! கொஞ்சத் தூரம் மட்டும் போகலாம் என்ற அமைதி தான்!

ஆனால்,

கார்த்திகேசு வெகு சிரமத்துடன் திரும்பிப் பார்த்தார். நன்றாகத் திரும்பிப் பார்க்க பக்கத்தில் இடித்துக் கொண்டு நின்றவர்கள் விட்டால் தானே! 'என்ன மாஸ்டர் இண்டைக்குப் பென்சன் அரோகரா தான் போலை கிடக்கு! அங்கை ஷெல் அடி நடக்குதாம்!'

ஏமாற்றத்தின் விளிம்பில் நின்றது அவரின் குரல்

'அதுதான் நானும் யோசிக்கிறன்!' பரிதாபமாய் ஒலித்தது மயில்வாகன வாத்தியாரின் குரல் சென்றமாதம் இருவரும் பென்சன் எடுக்கச் சென்றபோது, கோட்டையிலிருந்து 'அமர்களும்' பென்சன்காரரோடு சேர்ந்து வெளியே வர முயன்ற சமயம் ஏற்பட்ட அமளிகள்...! அப்பப்பா! நினைக்கவே பயமாய் இருந்தது.

'என்ன பெரியவர் பென்சனுக்கோ!'

நக்கலுடன் ஒலித்த ஓர் இளவட்டக் குரலைக் கேட்ட கார்த்திகேசு நிமிர்ந்தார்.

'ஓ தம்பி பென்சனுக்குத்தான்! இண்டைக்கு முடியாது போலை கிடக்கு!' உங்களுக்கு கிராமிய வங்கியிலே பென்சன் எடுக்கிறதுக்கு நல்ல வசதி இருக்குத் தானே இப்ப! எச்சேக்காறர் எத்தனை தரம் பேப்பரிலை போட்டவை! நீங்களும் அங்கைதான் போக நிற்கிறியள்!'

'மச்சான் சிலபேருக்கு பட்டணம் போகாவிட்டால் பொச்சம் தீராது! போய் பார்க்கட்டன் விடு!' இது மற்றுமொரு குரல். இதைத் தொடர்ந்து மெல்லிய சிரிப்பலைகள். கார்த்திகேசு பதில் இறுக்கவில்லை. மௌனம் மனதை இறுக்கியது அவரின் சிந்தனை படர்ந்தது

மினி பஸ் ஓடிக்கொண்டிருந்தது ஓட்டுமடச் சந்தி, சிவலிங்கப்புளியடிச்சந்தி, மனோகரா தியேட்டர் சந்தி என்ற இடங்கள் மறைகின்றன. சிவன்கோவிலடிச் சந்தியை பஸ்வண்டி நெருங்குகிறது. திடீரென்று ஒரு பலத்த சப்தம் கேட்டது.

விழுந்தது ஷெல்!

பஸ் நின்றது

'எல்லாரும் இறங்குங்கோ! அங்காலை போகாது!'

பிரயாணிகள் முண்டியடித்துக்கொண்டு, பயப்பிராந்தியுடன் இறங்கினார்கள். கார்த்திகேசுவும் மிகுந்த சிரமத்துடன் இறங்கினார். ஏதோ ஞாபகம் வந்தவராய் தனது சட்டைப்பையைத் தட்டிப்பார்த்தார்.

பை வெறுமையாய் இருந்தது! கார்த்திகேசு முழித்தபடி நிற்கிறார்!!

(யாவும் கற்பனை)

# 45 வருடங்களுக்கு---

(5ம் பக்கத் தொடர்ச்சி)

டுங்கள்' என்று ஓர் ஆலோசனையையும் கூறினார்.

**குறைந்தது பத்துரூபா**

32 பக்கத்தில் 500 பிரதிகளை அச்சிடுவதற்கு ரூபா 2000 ஆமானால், அச்சுச் செலவு மட்டுமே ஒரு பிரதிக்கு நாலு ரூபா ஆகிறது! இதைவிட எழுத்தாளருக்கு உரிமைப்பணம் என்ன, விளம்பரச்செலவு என்ன? விற்பனையாளருக்கு 20 வீத விற்பனைக்கழிவு என்ன விற்பனையாகாமல் சொற்பப் பிரதிகள் இருந்துவிட்டால் அந்த நட்டமென்ன - இவை எல்லாவற்றையும் கணக்குப் பார்த்து இந்த 32 பக்க நூலுக்கு என்ன விலை போடலாம்?

குறைந்தது ரூபா 10 ஆவது போட வேண்டியிருக்கும்.

32 பக்கப் புத்தகத்தை பத்து ரூபாவுக்கு யார் வாங்குவார்கள்? யாராவது முகத்துக்கு அஞ்சி வாங்கினாலும் மனதுக்குள் திட்டுவார்கள்

வெளியீட்டாளர் சொன்ன ஆலோசனைப்படி குறைந்தது 2000 பிரதிகளாவது அச்சிட்டால் தான் நூலுக்கு ஒரு 'நியாயமான' விலை போட முடியும்.

முப்பத்திரண்டு பக்க நூல் விஷயத்தை எதற்கோ ஆரம்பித்து, எங்கேயோ வந்து விட்டேன். நான் வெளியிட்ட முதலாவது நூல் சுமார் 32 பக்கங்களைக் கொண்டது தான்

சீயூஸ்பிரிண்ட் கடதாசி ஆர்ட் பேப்பர் மேலட்டை. அச்சிட்டதும் 500 பிரதிகள் தான்! இன்றைக்கு இந்த 500 பிரதிகளை அச்சிடுவதற்கு ரூபா 2000 தேவை என்று கண்டோம்

ஆனால் சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்னர் 1940ம் ஆண்டளவில் இந்த நூலுக்கு எவ்வளவு செலவு ஏற்பட்டது?

சொன்னால் நம்ப மாட்டீர்கள்!

அந்தக் காலத்தில் இந்தியாவிலிருந்து ஸ்ரீ ராமுலு பிரசுரங்கள், என்ற பெயரில் இந்த மாதிரிச் சின்னஞ்சிறு நூல்கள் நிறைய வந்து கொண்டிருந்தன இந்தியாவிலுள்ள பல பெரியார்களின் வரலாற்றுச் சுருக்கங்களைத் தனித்தனி சிறுசிறு புத்தகமாக அழகாக வெளியிட்டு வந்தார்கள். ஒரு பிரதியின் விலை இரண்டு அணா (12 சதம்) மட்டுமே!

எதையாவது நல்ல விஷயத்தைப் பார்த்தால், நானும் ஏதாவது அப்படிச் செய்ய வேண்டுமென்று ஓர் உந்துதல் எனக்கு இப்போதும் உண்டு. அப்போதும் இருந்தது ஸ்ரீ ராமுலு பிரசுரங்கள் சிலவற்றைப் பார்த்து எனக்கு, அதே மாதிரி ஈழத்துப் பெரியார்களின் வரலாற்றுச் சுருக்கங்களையும் வெளியிட வேண்டுமென்ற ஆசை பிறந்தது. அதையும் நானே எழுத வேண்டும் என்பது முக்கியம்

இந்த ஆசைகள் மனதுக்குள்ளே பொங்கிக் கொண்டிருந்தபோது எனக்குக் கிடைத்தது 'நாவலர் சரித்திரம்' என்ற நூல். கைலாசபிள்ளை அவர்கள் எழுதியது; பெரிய நூல் அந்த நூலைப்படித்து சுருக்கோ சுருக்கென்று சுருக்கி, என்னுடைய புதிய வசன நடையில் ஒரு குட்டி நூலை எழுதினேன்.

'நாவலர் கோன்' என்று அதற்குப் பெயர் சூட்டினேன். இந்த 'நாவலர் கோன்' தான் நான் எழுதி வெளியிட்ட முதலாவது நூல்

அச்சகங்களைப் பற்றி அப்போது எனக்கு ஒன்றும் தெரியாது. யாழ் நகரிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த 'இந்து சாதனம்' ஏட்டில் எங்கள் ஊரைச் சேர்ந்த திரு. க. கி. நடராசன் என்பவர் உதவியாசிரியராக இருந்தார் (பின்னால் இவர் 'சிவதொண்டன்' பத்திரிகை நடத்தியவர்) அவரிடம் போனேன். அவர் சைவப்பிரகாச அச்சியந்திர சாலையாருடன் எனக்குத் தொடர்பு தந்தார் அவர்கள்தான் 'நாவலர் கோன்' அச்சிட்டுத் தந்தார்கள்

32 பக்கங்கள். 500 பிரதிகள்.

சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்பு, அதை அச்சிடுவதற்காக நான் கொடுத்த தொகை- நம்புங்கள்.

ரூபா 35 மட்டுமே!

ஒரு பிரதியின் விற்பனை விலை 30 சதம்

500 பிரதிகளை விற்க வேண்டுமே!

அப்போது பூபாலசிங்கம் புத்தகசாலை இல்லை. வேறு புத்தகசாலைகளைப் பற்றியும் எனக்கு விவரம் தெரியாது

'நூல் வெளியீட்டு விழா' என்ற வார்த்தையே தெரியாத காலம்

தெரிந்தவர்களிடம் நேரில் கொண்டு சென்றுதான் விற்க வேண்டும

'தெரிந்தவர்கள்' மிகக் குறைவு

வட்டுக்கோட்டையிலிருந்த டாக்டர் செல்லையா என்ற ஒரு பெரியார் எங்கள் கிராமத்தில் ஒரு சைவப் பாடசாலையைத் தாபிக்க பெரு முயற்சி எடுத்தவர் அவரிடம் 'நாவலர் கோன்' ஒரு பிரதியைக் கொடுத்தபோது மிகவும்பாராட்டியதோடு ஐந்து ரூபா பணமும் தந்தார்.

ஐந்து ரூபா! அடேயப்பா இப்போது ஐந்நூறு ரூபா கிடைத்தாலும் அப்படி மகிழ்ச்சி ஏற்படாது

'தெரிந்தவர்கள்' 30 சதம் தந்து ஒவ்வொரு பிரதி வாங்கினார்கள் அவர்களில் சிலர் 50 சதம், ஒரு ரூபா தந்ததாகவும் நினைவு

எப்படியோ கிட்டத்தட்ட என்றாலும் நான் செலவிட்ட ரூபா 35 கிடைத்திருக்குமென்று நினைக்கிறேன்.

ஆனால் விற்பனையாகாத பிரதிகள் நிறைய வீட்டில் இருந்தன

எது எப்படியிருந்தாலும், எனது முதலாவது நூலை அச்சில் பார்த்தபோது ஏற்பட்ட திருப்தியும், மகிழ்ச்சியும் இருக்கிறதே. அதை இப்போது நினைத்தாலும் நெஞ்சு நிறைகிறது! *

★ உதயனுக்கு ★

★ எம் நல்வாழ்த்துக்கள் ★

பிரயாண ஒழுங்குகள்

GLORIA TRAVELS

★ சுவிட்சர்லாந்து

★ ஜேர்மனி

★ பிரான்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன்

எமது பிரயாண முகவர் அழைத்துச் செல்வார்

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND), விசா, ரிக்கற் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS

சின்னத்தம்பி அவெனியூ,

மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் முதல் ஆண்டு நிறைவு சிறப்பிதழ்



வேலுண்டு வினைதீர்க்க
மயிலுண்டு எமைக்காக்க
பாரினில் பயம் ஏது?

## 'உதய - சஞ்சீவி' நீடு வாழ்க!

'உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை"
உயரிய இலட்சிய நோக்குடனே
நன்மை நமக்குச் செய்து வரும்
நாளிதழ் 'உதயன்' நீயே
அன்பை அறிவை எங்ஙணுமே
அழகாய்ப் பரப்பும் பணிதனிலே
நன்றே வளர்க நல்லிதழே!
நீடுவாழ்க புகழ் படைத்தே!

நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

## ஈழ மண்டல நாட்டின் இலக்கியப் பாரம்பரியம்

● க. சி. குலரத்தினம் ●

முன்னர் பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக் குமரிக்கோடு முதலானவற்றைக் கொடுங்கடல் கொண்ட போது ஆற்றிடைக்குறையாக எஞ்சிய பகுதி இலங்கியதால் இலங்கை எனப் பெயர் பெற்றது.

அது பொன் போல் ஒளி வீசியதால் ஈழம் எனப் பெயர் பெற்றது. இந்த ஈழம் பெருநிலப் பரப்பாய தமிழ்நாட்டின் ஒரு பகுதியேயாதலின் இது வேறு தமிழ்நாடு வேறல்ல என்பது தெளிவு.

முதற்சங்கத்து முரஞ்சியூர் முடிநாகராயர் என்பார் கடற்கோட்பட முன் நிலவிய இப்பகுதியினரேயாவர். மூன்றுஞ் சங்கத்துப் புகழ் பெற்ற பூதன்தேவனார் ஈழத்தவரேயாவர். அவருடைய பாடல்கள் அகநானூறு, குறுந்தொகை, நற்றிணையாகிய தொகுப்புக்களில் உள்ளன. குறுந்தொகையில் குறிஞ்சி தழுவிய பாடலொன்றில், (அது 360 ஆம் பாடல்) அவர் தலைவி கூற்றாகத் தோழிக்குச் சொன்ன சூசக உரை உள நூலார் உவந்தேற்றுப் போற்றுந்தன்மையதாகும்.

தலைவிக்கு உடம்பு மெலிந்திருந்தது. அது கண்ட தாயார் வேலனைக் கொண்டு பூசை செய்விக்க ஒழுங்கு செய்தாள் தலைவியின் கருத்தில் வேலன் நோய் மருந்து அறியான். அவனுடைய ஆடல் பாடலைக் காணக் கேட்கத் தலைவன் தலைகாட்டு



வான். தலைவன் முகதரிசனம் கண்டாலே தன் நோய் நீங்கிவிடும். ஆகவே இன்று நாம் துன்பத்தைப் பொறுத்துக்கொள்வோமாயினும் தலைவனை வரவேண்டாம் என்று சொல்லிவாடி என்று கூறினன் "அரும்பட ரெவ்வம் இன்று நாம் உழப்பினும் வாரற்க தில்ல தோழி!" என்பது பாட்டின் உயிர் நாடி.

இத்தகைய உயிர்ப்பாகிய பாடல்களைப் பாடிய தமிழன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இங்கிருந்தான் அந்தப் பாரம்பரியம் பண்டு தொட்டு இன்று வரை இங்கே நிலவி வருகின்றது என்பது இங்கே தோன்றி வாழ்ந்த தமிழ்ப்பணி புரிந்து தம் பெயர் நிறுவித் தாம் மாய்ந்த தமிழ்ப் பெரும் புலவர்கள், வித்துவான்கள், பண்டிதர்கள், மகா வித்துவான்கள், கவிராயர்கள், தருக்ககோடரிகள், உரையாசிரியர்கள் என்றித்திறத்துப் பேரறிஞர்கள் பெயர்களால் அறியக்கிடக்கிறது.

இங்கிலாந்திலே நிலையான அரசை நிறுவிய ரியூடர் மன்னர்களுக்கு முன்பே, வட இலங்கையில் தமிழ் மன்னர்கள் பேரரசர்கள் என்னும் பெரும் பட்டத்துக்கமைவாகச் சக்கரவர்த்திகள் எனப் புகழ் மணக்க நிலம் புரந்தனர். அவர்கள் காலத்தில் தலைநகராய நல்லூரில் தமிழ்ச்சங்கம் நிலவியது. அரசகேசரி முதலாய அரமனைப் புலவர்களும் அதில் கவியரங்கேறி இருந்தார்கள்.

பிற்காலப் பிரபந்த வகைகளுள் பள்ளுப் பாட்டு சனரஞ்சகமாக உழவர் வாழ்வைப்படம் பிடித்துக் காட்டுவது. இத்தகைய பள்ளுப் பிரபந்தத்தில் பழைமையான முக்கூடற் பள்ளிலும் பழைமையானது ஞானப்பள்ளு. ஞானப் பள்ளிலும் பழைமையானது கதிரைமலைப்பள்ளு. ஞானப்பள்ளும், கதிரைமலைப்பள்ளும் ஈழத்துமண் வளம் பாடுவன மண் வளம் பாடும் பாடல்கள் பண்ணில் தோய்ந்த பாடல்கள் வல்லார்க்கு எண்ணிப் பொன்முடிப்புக் கொடுப்பதையும் பறைசாற்றுவது. பண்ணின் பயனும் இன்னிசை என்பதால் பண்ணிசையையும் வளர்த்த பாரம்பரியம் ஈழத்து இலக்கியப் பாரம்பரியம்

"பண்ணில் தோயப் பொருள் முடிப்புக்கட்டிப் பாடும் பாவலர்க்கு ஈந்திடவென்றே. எண்ணிப் பொன்முடிப்புக் கட்டிடும் ஈழ மண்டல நாடெங்கள் நாடே"

### சுவாமி விவேகானந்தர்

கீழ் நோக்கிச் சென்றபடியும், துன்பத்தில் மூழ்கிய படியும் ஏராளமான ஏழை மக்கள் நீ வாழும் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் நீ அவர்களை அணுகிச் சென்று உன்னுடைய ஆர்வத்தையும், உற்சாகத்தையும் செலுத்தி அவர்களுக்குத் தொண்டு செய்.

இதனால் நிச்சயமாக அமைதியும் ஆறுதலும் கிடைக்கும்

## உதயன் பிறந்த பின்...



உதயன் பிறந்த பின்
ஓராண்டு போயிற்று?
உண்மையிலே
அதை எண்ணும் வேளை
அதிசயந்தான்.
அட, அவ்வளவு கெதியாயா
இந்த நொடிகளும், நாட்கள்-கிழமைகளும்
புதியனவாகப் பிறந்தும்
மறைந்துடன் போவனவே!
ஒவ்வொரு நாளும் நடைபெறும் செய்தி
உரைப்பதற்கும்
அவ்வவர் எண்ண அலைகளை
ஊரில் அனுப்புதற்கும்
செவ்விய பண்பு நெறிகள் இவை
என்று செப்புதற்கும்
நல்விதமாக உதவும்
'உதயன்'!
நீ
நம் துணையே.
அறிஞரின் எண்ணங்கள் எத்தனை உண்டோ
அவை முழுதும்
முறைபட வாங்கி
எம் முன்னே படைக்க முனைந்திடுவாய்
துறைதொறும் தோய்ந்த புலவர்
வழங்கிடும் சொற்கலையை
நறுமணம் வீசும் தமிழிற் படைப்பாய்,
நவர்வமாய்.
உன் பணி நீள்க
உலகம் புகழ்க
உயர்வடைக
அன்புடன், 'சஞ்சீவி' யாக,
மருந்தாய்,
அமுதமுமாய்
நின்று தொடர்க;
நியமம் தவறு நெறிமுறையில்,
நன்கு பயில்க
பயன் பல நல்கி, நயமுடனே.

- முருகையன் -

★ உதயனுக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள் ★



கல்யாணக் கூறைகள், பட்டு வேட்டி, சால்வைகள் மற்றும்
சூட்டிங், சேட்டிங், நவீன டிசைன்களில் ஆடைகள் நிதான விலையில்
தரமான பொருட்களை பெற்றுக்கொள்ள

இளவரசி

S12, நவீனசந்தை, : சுன்னாகம்.

DEALERS IN TEXTILES AND FANCY GOODS

VISIT ELAWARASY CHUNNAKAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் முதல் ஆண்டு நிறைவு சிறப்பிதழ்

## நாளும் உருவாகி உதிக்கும் உதயன் இவன்.......!

காலை. 'உதயன்' ஆசிரிய பீடம் உஷாராகின்றது

இரங், இரிங் - டெலிபோன் பேசுகிறது

"தலை வணக்கம் வவுனியாவில் சுற்றிவளைப்பு, தேடுதல். மூடிக்கள் சிலர் பலி பிரசைகள் குழு முறையீடு'

'அப்படியா? இப்படி எவ்வளவு காலம் வேதனைப்படுவதோ?' — சலிப்புடன் கூறிக்கொண்டு 'உதயன்' எழுதிக் கொள்கிறான்.

ஒரு மூலையில் வானொலி ஏதோ சொல்லிக்கொண்டிருக்கிறது.

'பூலங்கை' என்ற சொல் வானொலியில் கேட்கிறது

காது அங்கு நீள்கிறது. அப்படி ஒன்றும் புதிதாக ஆகாசவாணி அலட்டிக்கொள்ளவில்லை. வழக்கம்போல் பல்லவி தான்.

உள்ளூர்ச் செய்திகள் பரிசீலிக்கப்படுகின்றன. பண்டிதர் நடையிலான செய்திகள் பத்திரிகை நடைக்கு மாற்றப்படுகின்றன

உடையுங்கோ —இப்படி ஒரு கட்டளை எதை உடைப்பது? அலுவலக பணியாளர் திரும்பிப் பார்க்கிறார்.

அனுமார் வால்போல் நீண்டுபோன வசனத்தை நாலாக உடைத்து செய்தியைத் திருப்பி எழுதுங்கள் —இதுதான் அந்த 'உடையுங்கோ' வின் அர்த்தம்

இதனிடையில் இன்டர்காம் அலறுகின்றது

'சொல்லுங்கோ' 'சந்திக்க ஒரு பெரியவர் வந்து இருக்கிறார்'

'உள்ளே அனுப்புங்கோ'

பெரியவர் வருகிறார். 'ஐயா, கூட்டாருங்கோ. என்ன விஷயம்'

'மேயின் ஒன்றில் எனது பேச்சு நடைபெற உள்ளது. அச்செய்தியைப் பிரசுரிக்க வேண்டும்'

இந்த உரையாடலுக்குப் பின்னணியாக திடீர் என்று 'இ' என்று ஏதோ சத்தம் கேட்கிறது

'ஹெலி' வட்டமிடுகிறதோ? அருகில் இருந்



தவரைப் பார்த்து மற்றவர் கேட்கிறார்.

காற்றாடியின் சத்தம் தான் அது என்று பின்னர் தெரிந்தது அந்த நேரம் பார்த்து அலுவல

தீபன்ராஜா

கச் செய்தியாளர் உள்ளே நுழைகின்றார்.

'இன்று என்ன நிகழ்ச்சிகள்?'

'அங்கு உண்ணாவிரதம், இங்கு ஊர்வலம் அந்த மண்டபத்தில் கருத்தரங்கு—இந்த கவியரங்கில் கவிதை அரங்கு' எல்லாவற்றையும் குறித்துக்கொண்டு அவர் வெளியேறுகிறார்

உள்ளூர்ச் செய்தியாளர் ஒருவர் உள்ளே நுழைகின்றார்

'மாஸ்டர் வாருங்கோ'

'கட்டுக் கட்டாகச் செய்திகளை அனுப்புகின்றேன் நீங்கள் செய்திக் கொத்தில்தான் பிரசுரிக்கின்றீர்கள் இப்படிச் செய்யலாமா?'— அவர் கேட்கிறார்

'இடவசதி இன்மை தான் எல்லாவற்றுக்கும்

> செய்திகளை முந்திக் கொண்டு தருவது தினசரி பத்திரிகையின் கடமை
>
> இந்தக் கடமையைச் செய்யும்போது பல கஷ்டங்களை தினசரி பத்திரிகைகள் எதிர் நோக்குகின்றன
>
> செய்திகளை பிழை இன்றி முந்திக்கொடுப்பதில்தான் பத்திரிகையின் திறமை வெளிப்படுகிறது
>
> கடந்த ஓராண்டு காலத்தில் 'உதயன்' வாசகர்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றுள்ளான்
>
> அந்த 'உதயன்' எப்படித் தயாராகிறான்? அதுபற்றிய விவரணமே இங்கு பிரசுரமாகிறது.

காரணம் பொறுப்பானவரின் பதில்.

இதனிடையில் 'இன்டர்காம்' அலறியபடியே ஆசிரியரிடம் அடுத்தடுத்து விஷிட்டர்கள்.

தலையங்கம் எப்போது எழுதுவது — ஆசிரியர் சலித்துக்கொள்கிறார்.

இதனிடையில், கொழும்பு போஸிங் செஷனில் இருந்து கொப்பி'கேட்டு வந்தபடி.

அறையின் ஒரு பகுதியில் 'வெளிநாட்டுச் செய்திகள்' குவிந்தவண்ணம் உள்ளன.

இப்படி எப்படியோ பகல் பொழுது கழிந்து விடுகின்றது.

### மாலையில்

மாலை – மீண்டும் ஆசிரிய பகுதி கலகலக்கின்றது. 'மினி' பஸ் மூலம் வந்துசேரும் செய்திகளில் 'மேஜர்' செய்திகள் எல்லாம் தெரிந்து எடுக்கப் படுகின்றன.

பக்கம் வாரியாகப் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன

இதனிடையில் டெலிபோன் ...

மட்டக்களப்பில் சுற்றிவளைப்பு, தேடுதல், சிவிலியன்கள் உயிரிழப்பு—

செய்தி எழுதப்படுகிறது.

என்ன! அறிக்கைகளை காணவில்லை. இன்னும் வரவில்லையோ!

இன்டர்காம் அலறுகிறது.

அறிக்கைகள் வருகின்றனவோ? 'செக்யூரிட்டி' வருகிறார்.

'ஐயா, அறிக்கை கொண்டுவந்துள்ளனர்'

'அப்படியா, இருக்கச் சொல்லுங்கள் வாறம்'

மாநிலச் செய்திகள், வாசிப்பவர்...... செய்தி ஆரம்பிக்கிறது

'இலங்கை இனப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வுகாண மத்திய அரசை தமிழ்நாடு அரசு மீண்டும் வலியுறுத்தி உள்ளது. தொலைபேசி 'கொர்' அழுகின்றது கொழும்புக்கு முறுக்கி, முறுக்கி தொலைபேசிக்கு 'அழுகை'யே வந்துவிட்டது.

### கழுத்தறுக்கும் கருவி

யாழ்ப்பாணம் பத்திரிகைகளுக்கு முதல் நம்பர் எதிரி தொலைபேசி தானே.

எந்த நேரத்தில் கழுத்தறுக்கும் என்று சொல்ல முடியாது.

என்ன செய்வது, வானொலியைத் திருக வேண்டியதுதான்.

''இந்த நிலையில்... லீட் நியூஸ்'' தயாரா?

இக்குரல் கேட்டு திடீர் என்று பதற்றம்.

ஒரு கைபார்ப்போம் என்று எண்ணிக் கொண்டு 'டெலிபோனை' டயல் செய்ய......

முகத்தில் 'டால்' அடித்தாற் போல் மகிழ்ச்சி.

''என்ன லைன் கிளியரோ?'' — அருகில் இருப்பவர் துருவிக் கேட்கிறார்

'ஏதாவது நல்ல செய்தி உண்டா'' — கொழும்பைத் துருவுகிறார் மற்றவர்

இலங்கையில் அப்பாவித் தமிழர் கொல்லப்படுவது குறித்து இந்தியா மீண்டும் இலங்கையிடம் கவலை தெரிவித்துள்ளது.

கொழும்பு தந்த இச்செய்தி ஆசிரியர் முன் வைக்கப்படுகிறது.

இதை 'லீட்' பண்ணுவதா?

இப்படிச் சொல்லித் தான் இந்தியா எல்லாரையும் 'மிஸ்லீட்' பண்ணுறது போதாதா?

இப்படி முணுமுணுக்க

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சஞ்சீவி: ஒரு நோக்கு----

(5ம் பக்கத் தொடர்ச்சி) கலைக் கழக விரிவுரையாளர்கள் பங்கெடுத்து கூடி அவையுமாக விவாதத்தை நகர்த்திச் சென்றார்கள்

சஞ்சீவியின 'கருத்துக் கலசம்' நிகழ்கால நிகழ்வுகளின் தனித்தன்மையை, உண்மைநிலையைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது ஆசிரியரின் ஆளுமையை அகன்ற நோக்கை, விரிந்த மனப்பான்மையை முற்று முழுதாக எடுத்துக்காட்டும் கண்ணாடியாகக் காணப்படுகிறது.

'சிகதி' எழுதும் 'அரசாங்க அலுவலகங்களில்' பகுதி குத்தலும் கிண்டலும் என்றாலும் பொது மக்கள் பயனடைய அரச அலுவலர்களைச் சிந்திக்க வைக்க, உசார்படுத்த உதவுகிறது

குறுமுனியின் உள்ளும் புறமும் உள்நாட்டுவெளிநாட்டுச் சம்பவங்களின் தொகுப்பாக உள்ளதுடன் அரசியல் சம்பவங்கள் சிலவற்றையும், கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் எம் முன் நிறுத்துவனவாகவும் காணப்படுகின்றன

என் பி சிவனின் 'உலக உலா' உலக நிகழ்ச்சித் தொகுப்பாக இருப்பதுடன் பக்குவமாகவும் சொல்லப்படுகிறது.

எடுகு சிறிது தான். கடித்தால் அதன் காரம் ஓங்காரமாகும் கல்வி, கேள்வி, சக்தி, பொருளாதாரம், புத்தி புகட்டல் என தம்பிக்கு 'கடல் கடந்த கடிதம்' காரமாகவும் சிந்தனையைத் தூண்டுவதாகவும் இருக்கிறது. அண்ணா, கலைஞர், மு. வ தம்பிக்கு எழுதியவை எழுச்சியை ஊட்டியதை ஞாபகப்படுத்துகின்றது

நிகழ்கால பொருளாதார முன்னேற்றத்தை மையமாக வைத்து எழுதப்படும் 'சமமும் புலமும்', 'வைத்திய சஞ்சீவி', விளையாட்டு விமர்சனம், நினைவு கினக் கட்டுரை என சஞ்சீவியின் பார்வை அகலப்பார்வையாகத் தெரிகிறது

ஈழகேசரி பாலர் கழகம்போல் 'சிறுவர் சுடர்' சிறப்பாக அமைந்துள்ளது. மாணவருக்கு இது எழுதுவதற்கு வாய்ப்பைத் தருகிறது' எழுத்தாளர்கள் அ செ மு., வரதர், புதிதொளி ஈழகேசரி பாலர் கழகத்தில் எழுதி முன்னுக்கு வந்தவர்களாவர்.

'நினைவலை' நல்லதொரு முயற்சி. அறிஞர் பெருமக்களின் கருத்தை எமக்குச் சுவைபடச் சொல்லுகிறது. இது வாரம் தோறும் வெளிவருவது வரவேற்கத் தக்கது.

இளம் கலைஞர் அறிமுகம் காலத்தின் தேவை. இதனைச் 'சஞ்சீவி' நிறைவேற்ற முன்வந்திருப்பது பாராட்டுக்குரியது.

சினிமாச் செய்திகள் தாங்கியுள்ள 'வெள்ளித்திரை' பல்சுவைதரும் தொகுப்புகள் பல ஒன்றாக மிளிரும் பஞ்சாமிர்தம் ஆகியன சஞ்சீவியின் நிரந்தர அம்சங்கள் பஞ்சாமிர்தம் பஞ்சாமிர்தம் தான். சந்தேகமில்லை.

நேரு மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதம் பல மாதங்களாக வெளிவந்து அக்கால அரசியல், பூகோள, பொருளாதார அம்சங்களை எமக்குத் தருகின்றது. காலத்தால் அழியாத வரலாற்றுக் கடிதங்கள் அறிஞருக்கு, ஆய்வலருக்கு நல்ல விருந்து.

'மக்களின் மனக்கோலம்' திரு. எஸ் ஜெ. பிரட்ணதுரை எழுதும் போதெல்லாம் எமது பாராட்டைப் பெறுகிறார் வளரும் எழுத்தாளருக்கு எதிர்காலம் ஏற்றமுடையது. தீபன்ராஜா காலமறிந்து இடமறிந்து சம்பவங்களைத் தொகுத்துத் தருகிறார் பாராட்டுக்கள் தீபன்ராஜா.

பாடம் பயில்வோம், சொற்சிலம்பம் மாணவருக்கு மற்றுமோர் கலைவிருந்து அறிவை, உற்சாகத்தைத் தருவன.

உதயன்—சஞ்சீவி நடத்திய நல்லூர் உற்சவ அறிவுப்போட்டி 12 பேருக்குப் பரிசளித்துக் கௌரவித்துள்ளது- சஞ்சீவி தீபாவளிமலர் வி.கே யின் படத்துடன் 6 தீபாவளி பற்றிய கட்டுரைகளையும் தாங்கியுள்ளது சஞ்சீவியில் சிறுகதை வெளிவராத குறையையும் போக்கியுள்ளது இன்றைய நிலையை 'மண்ணும் மகனும்' பிரதிபலிக்கிறது. சபாஷ் ஜெகதீஷ்.

சமுதாயத்தின் இன்றைய நிகழ்வுகளே நாளைய தலைமுறையின் அடித்தளம் இதனை 'உதயன்'-'சஞ்சீவி' செய்துவருவதுடன் மாணவருக்காக 'அர்ச்சனா' இதழையும் வெளியிட்டு மற்றொரு சாதனையையும் ஏற்படுத்தி விட்டது.

சஞ்சீவியின் வளர்ச்சி மெச்சத்தக்க வளர்ச்சி. வளர்ச்சியும் காணப்படுகிறது. கட்டுரைகளுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம், செய்திகளை வழங்கும் அச்சீட்டுமுறை நன்கு அமைந்துள்ளது. செய்தி தருவது மாத்திரமல்ல, செய்தி சேகரிப்பு முறையிலும் சில முன்னேற்றங்களைக் கண்டுள்ளது.

வாழ்க! வளர்க!'சஞ்சீவி'

A Great way to Multiply
your MONEY
INVEST WITH SHABRA
RELIABLE GUIDE FOR A BETTER LIFE
YOUR FRIENDS IN FINANCE
SHABRA
207, Power House Road, JAFFNA. Telephone: 22073
HEAD OFFICE: 61, NEW BULLER'S ROAD, COLOMBO-4 Telephone: 589310-500576
பணம் எம்மைத் தேடி வருவதில்லை
நாம் அதைச் சம்பாதிக்க வேண்டும். வியர்வை சிந்த வேண்டும். அப்படிச் சம்பாதித்த பணத்தை
பாதுகாப்பது இக்காலகட்டத்தில் கஷ்டமானதொன்றாகும். ஆனால் இவ்வேளையில் தான்
"ஷப்ரு" உங்கள் நண்பனாகிறான்
ஆம் நிதித்துறையில் பாதுகாப்பான, நயம் நேர்ந்த நண்பன் "ஷப்ரு"
மதியுள்ள மதிப்புக்குரியவர்கள் மதிப்பது பாதுகாப்பான நண்பன்
ஷப்ரு யுனிக்கோ நிதி நிறுவனம்
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22073, 24805
தலைமையகம் 61, புதிய புல்லர்ஸ் வீதி, கொழும்பு-4 தொலைபேசி: 589310, 500576
நிதித்துறையில் உங்கள் நண்பன் "ஷப்ரு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செபமாலை மாதாவே என்னை
உன்னில் இணைத்தவளே!
இந்நாளில் உன்னை கரம் கூப்பி
துதித்திடுவேன்.

ஜோ. எகட்டன் & ஊழியர்கள்
செனித் - யாழ்ப்பாணம்.

உதயனுக்கு ஓர் பக்தி மாலை
உனது இரண்டாவது ஆண்டு
அவள் பாதச்சுவட்டில் தொடங்கட்டும்.

---

உதயனின்
உயர்ச்சியான
சேவை
உயர்ந்தோங்க
எமது
நல்வாழ்த்துக்கள்

செனித்
நிறுவனம்

---

இதோ! அறிமுகப்படுத்துகின்றோம்.
**1987 கலண்டர்கள்**

எல்லா வகையான அளவுகளில் நீங்கள் ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம். உங்கள் பெயர், விலாசம் இலவசமாக அச்சிட்டுப் பெறலாம்.

விவரம் அறிய
தொடர்பு கொள்ளுங்கள்:-

**ஜோ. எகட்டன்**
செனித் மார்கட்டிங் அன்ட்
அட்வடைசிங் சிஸ்டம்ஸ்
19 / 3 கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

இது மட்டு மல்ல சகலவிதமான டிசைன்கள், Cut Outs, விளம்பர அறிவித்தல்கள், சஞ்சிகைகள் அல்லது மலர்களுக்கு அட்டைப்பட டிசைன்கள் திருமண அழைப்பிதழ்கள் வியூ காட் டிசைன்கள், விளம்பர போஸ்டர்கள், Visiting Cards டிசைன்கள், உங்கள் உற்பத்திப் பொருட்களின் கவர்ச்சிப் பெட்டிகள், சுற்றுத் தாள்கள், டிசைன்கள் எம்மை அணுகுங்கள். எமது கலைப்பிரிவு பொறுப்பாளர் திரு.பாலாஜி B. Com. அவர்கள் உங்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவார்.

மற்றவர்கள் உறுதியளிப்பதை நாங்கள் முடித்து வைக்கின்றோம்.

செனித்
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை
யாழ்ப்பாணம்.

---

உதயனுக்கு
எமது
முதலாவது
பிறந்த தின
வாழ்த்துக்கள்
★
தொடரும்
இரண்டாவது வயதில்
வீறுநடை போட
எமது ஆசிகள்!

**சண்முகம்
டிரேடர்ஸ்**
இல 185(65) பெரிய தெரு,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி:- 22421

---

**Happy Birthday UTHAYAN
Many happy return's From:
Zenith Joe Egerton**

உதயனே!

ஓர் ஆண்டை பூர்த்திசெய்து இரண்டாவது ஆண்டை நோக்கி வீறுநடை போடும் நீ ஓர் அதிசயன். உனக்கு எமது வாழ்த்துக்கள்.

ஆம். நீ கடந்த ஆண்டு கார்த்திகை மாதம் 27 ஆம் திகதி உதிக்கையில் உன்னோடு தோளோடு தோளாக நின்று கடந்த ஒரு வருட காலமாக விளம்பரத் துறையில் சகல ஒத்தாசைகளையும் செய்த நாம் உனது பிறந்தநாட் பரிசாக ஒரு செய்தியை உன்னோடு உனது வாசகர்களுக்கு பகிர்ந்து கொள்கின்றோம் என்பதனை கூறிக் கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

**ஜோ. எகட்டன்**
(செனித் மார்கட்டிங் அன் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்)
19/3, கொழும்புத்துறை வீதி,
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

---

**உளவள ஆலோசனை நிலையம்**

யாழ் நகரில் ஓர் புதிய உதயம்!

உங்கள் மனக் கவலைகளை விட்டொழியுங்கள்!
எத்தனை கோடி பணமிருந்தாலும்
நிம்மதி வேண்டும் . . . . .
வெளிநாட்டில் பயிற்சி பெற்ற ஆலோசகர்கள்
உங்கள் பிரச்சினைகளுக்கு பரிவாயும்
அந்தரங்கமாயும் ஆலோசனைகளை
வழங்குகின்றார்கள்

ஆலோசனை நேரங்கள்: பிற்பகல்
வியாழன் 2-30 மணிமுதல் 5-30 மணி வரை
ஞாயிறு 2-30 ,, 5-30 மணி வரை

மற்றைய நாட்களில் பதிவுசெய்தல் மட்டுமே
காலை 8-30 மணிமுதல் மாலை 5-30 மணி வரை
(வெள்ளி விடுமுறை தினம்)

நாடுங்கள்:-
**உளவள ஆலோசனை நிலையம்**
19/3, கொழும்புத்துறை வீதி,
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
சுண்டுக்குளி, :: யாழ்ப்பாணம்.

விளம்பர அமைப்பு:
ஜோ. எகட்டன் செனித் ADS,
யாழ்ப்பாணம்.

---

**உதயனின் முதலாவது
பிறந்தநாள் வாழ்த்து**

யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி,
இரண்டாம் ஒழுங்கை, 15-ஆம் இலக்க
பணி மனையில் தமிழ்ப் பெருங்குடி மக்களின்
தவப்புதல்வன்

★ **உதயன்** ★

தனது முதலாலது பிறந்த நாளை ஈழத்
தமிழர்களின் நல்லாசியுடன் விமரிசையாகக்
கொண்டாடுகிறார்
உள்ளூர்ச் செய்திகளையும் உலகச் செய்திகளையும்
உடனுக்குடன் தந்து உள்ளங்களில் நிறைந்த

★ **உதயனே**
உன்னை நாமும் வாழ்த்துகின்றோம்.

**மணிக்குரல் மேஜர் ஷண்**
ஷெல் அடிகளின் மத்தியிலும் சேவையாற்றி
வர்த்தகர்களின் விற்பனை பெருக்கிடும்
விளம்பர சேவை

★ **மணிக்குரல்** ★

எமது சேவையில் ஒலி பெருக்கி
விளம்பரப்பதிவு மற்றும் பிறந்தநாள், வர்த்தக
விளம்பரங்களை பதிவு செய்துகொள்வோருக்கு
பதிவு செய்வதற்குரிய
புதிய யக்ஷல் கெசற் இலவசம்
மற்றும் எமது சேவையில் தொடர்ந்து
விளம்பரங்களை ஒலிபரப்பு செய்வோருக்கு
விசேட சலுகை; நீங்கள் கொடுக்கும்
அவ் விளம்பரத்தை இசையுடன் ஆண், பெண்,
இரு குரல்களிலும் பதிவு செய்து
இலவசமாக வழங்குவோம்.



மேஜர் ஷண்
**மணிக்குரல்
விளம்பர சேவை**
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

---

தலைவலியா? நாரிப்பிடிப்பா?
ஜலதோஷமா?

இருக்கவே இருக்கின்றது!

**தோலகட்டி ரோசரியன்
தைலம்**
(BALM)

நீங்கள் இஞ்சித்தும் அஞ்சத் தேவையில்லை ஒரு குப்பி ரோசரியன் தைலம் உங்கள் வீட்டில் கைகாவலாக இருக்கவேண்டும்; நிச்சயம் உங்கள் தலைவலி, ஜலதோஷம் சிட்டெனப் பறந்திடும்.

இன்று நேற்றல்ல கடந்த 30 வருடங்களாக மக்கள் மனதில் நிலைத்த பெயர் தோலகட்டித் தயாரிப்புக்கள். சித்த வைத்தியர்களின் ஒத்த கருத்துப்படி அதி சக்தி வாய்ந்த மூலிகைகளினால் தயாரிக்கப்படுகின்றது தோலகட்டி ரோசரியன் தைலம்

பாம் என்று கேட்காமல்
தோலகட்டி ரோசரியன் தைலம்
என்று கேட்டு வாங்குங்கள்

விலை: 7-50 மட்டுமே

ஏகப் பிரதிநிதிகள்:

**ஜோ. எகட்டன்**
செனித் மார்கட்டிங்
19/3; கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

இது ஓர் உள்ளூர் உற்பத்தி என்பதனை
மறவாதீர்கள்

---

# செனித்
# வழங்கும் புதுமைப் பரிசு!

வாசகர்களே!

நத்தார், புதுவருட, பொங்கல் வாழ்த்துக்களைத்
தெரிவிப்பதற்கு வாசகர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்
உங்கள் உறவினர்கள், நண்பர்கள், மற்றும் நீங்கள் நேசிப்பவர்களுக்கு
உதயன், மற்றும் உள்ளூர்ப் பத்திரிகைகள் மூலம் இலவசமாகத் தெரிவியுங்கள்

**நீங்கள் செய்ய வேண்டியது பின்வருமாறு:-**

நத்தார், புதுவருட, பொங்கல் வாழ்த்துக்களை, எந்தப் பத்திரிகையில் தெரிவிக்க வேண்டும் என்பதனையும், யாருக்கு தெரிவிக்க வேண்டும் என்பதனையும் தெளிவாகவும், அழகாகவும், கீழ்வரும் கூப்பனில் எழுதி 1986-ஆம் ஆண்டு மார்கழி மாதம் 20-ஆம் திகதிக்கு முன்னும் (நத்தார் வாழ்த்துக்களையும்) புதுவருட வாழ்த்துக்களை 1986-ஆம் ஆண்டு மார்சழி மாதம் 28ஆம் திகதிக்கு முன்னரும் தைப்பொங்கல் வாழ்த்துக்களை 1987-ஆம் ஆண்டு தை மாதம் 10-ஆம் திகதிக்கு முன்னரும் அனுப்பவேண்டும்.

ஆனால் வாழ்த்துக்களை அனுப்புபவர்கள் வாழ்த்துக்களை மூவருக்கு மட்டுமே தெரிவிக்கலாம். அத்துடன் (3) மூன்று தோலகட்டி நெல்லிரச லேபல்களை (நெல்லிரச போத்தலில் உள்ள லேபல்) அத்துடன் பத்திரிகையில் பிரசுரமாகும் கூப்பனை அனுப்பினால் மட்டுமே வாழ்த்துக்கள் பிரசுரமாகும். ஒருவர் எத்தனை பேரையும் வாழ்த்தலாம். ஆனால் (3) மூன்று நெல்லிரச லேபல்களுக்கு மூவர் (பெயர், விலாசம்) மட்டுமே வாழ்த்துக்குரியவர், உதாரணத்திற்கு 15(பதினைந்து) பேர்களை வாழ்த்த வேண்டுமாயின் 15 நெல்லிரச லேபல்களை கூப்பனுடன் இணைத்து அனுப்ப வேண்டும். ஆகவே உங்கள் லேபல்களைச் சேகரித்து பெயர் முகவரியுடன் உடனே அனுப்புங்கள்.

**செனித் வாழ்த்துக் கூப்பன்**

பெயர்: ____________

விலாசம்: ____________

வாழ்த்துக்குரியவரின் பெயர், முகவரி

பெயர்: ____________

விலாசம்: ____________

வாழ்த்து இடம் பெறும் பத்திரிகையின் பெயர்; ____________

உதயன் / ஈழநாடு / ஈழமுரசு

____________
கையொப்பம்.

(தேவையற்ற சொற்களை வெட்டிவிடுக)

அனுப்ப வேண்டிய முகவரி:-

**செனித் புதுமை வாழ்த்துக்கள்**
19 / 3, கொழும்புத்துறை வீதி,
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு முன் ஒழுங்கை)
யாழ்ப்பாணம்.

செனித் புதுமையின் உறைவிடம்
விளம்பர வடிவமைப்பு: ஜோ. எகட்டன், செனித், ADS.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த முறையில் வீடியோபடம் எடுப்பதற்கு
வீடியோ விஹொன்ஸ்
ஒளிப்பதிவாளர்
சி. இராஜராஜனின்
கலை நுணுக்க ஒளிப்பதிவில் உங்கள்
இல்லங்களில் நடைபெறும் மங்கல
நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்துகொள்ளுங்கள்
இல. 353C, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
வெலிங்டன் சந்திக்கு அருகாமை.

# உதயன்

27 · 11 · 1986 வியாழக்கிழமை

For quality Video Filming
VIDEO VIHONS
RAJARAJHAN'S
Effects and Techniques in videography gives great pleasure for all your memorable events at home or else.
No. 353 C. Clock Tower Road,
JAFFNA.
(Near Wellington Junction)



**பொய்யாமொழி**

**குறள்:**
தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல்.

**பொருள்:**
தன் உயிர்க்குத் துன்பமானவை இவை என்று உணர்ந்தவன், மற்ற உயிர்களுக்கு அத் துன்பங்களைச் செய்தல் என்ன காரணத்தாலோ?

## கோர்பச்சேவ் ராஜீவுடன் 2 ஆம் கட்டப்பேச்சு

புதுடில்லி, நவ 27
ரஷ்யத் தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவுக்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கும் இடையேயான இரண்டாம் சுற்றுப் பேச்சுக்கள் நேற்று ஜனாதிபதி மாளிகையில் நடந்தன. முதலாம் சுற்றுப் பேச்சுக்கள் கடந்த செவ்வாய்க்கிழமை பிரதமரின் அலுவலகத்தில் 4 மணி நேரம் நடந்தன.

இதனிடையில் ரஷ்யத் தலைவர் கோபர்ச்சேவ் இன்று (வியாழன்) இந்தியநாடாளுமன்றத்தின் இரண்டு சபைகளிலும் உரைநிகழ்த்துவார்.

நேற்றுக்காலை திரு. கோர்பசேவ் ராஜ்கட் சென்று காந்தி சமாதிக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். இந்திராகாந்தி, நேருஜி ஆகியோரின் நினைவாலயங்களுக்கும் ரஷ்யத்தலைவர் விஜயம் செய்தார்.

இந்திரா காந்தி சுடுபட்டு விழுந்த இடத்தில் நிறுவப்பட்ட கருங்கல் நினைவுச் சின்னத்துக்கு மலர்வளையம்வைத்து ரஷ்யத் தலைவர் அஞ்சலி செலுத்தினர்

பின்னர் ஜனாதிபதி ஜெயில்சிங்கை ரஷ்யத் தலைவர் சந்தித்தார். ரஷ்யத்தலைவரைக்கௌரவித்து ஜனாதிபதி பகல் விருந்துபசாரம் ஒன்றை அளித்தார். (–எ)

## பேர்ஹுர்ட் புதுடில்லி பயணம்

கொழும்பு, நவ. 27
இலங்கைத் தூதர் பேர்னுர்ட் திலகரத்தின இன்று வியாழன் புதுடில்லி செல்கிறர்.

இந்திய இணை அமைச்சர்கள் - ஜனாதிபதி ஆகியோருக்கு இடையே நடந்த பேச்சுக்கள் குறித்து உருவான சில விளக்கங்களை இவர் புதுடில்லிக்குக் கொண்டு செல்கின்றர் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ–எ)

## உதயன் ஒரு நோக்கு . . .

(3ம் பக்கத் தொடர்ச்சி)
தினச் சுருக்கமாக இந்த நான்கு பக்கங்களுக்குள்ளும் தெளிவாக அடக்கிப் புகுத்தியமை மிக மிக மெச்சத்தக்கதொன்ருகும். எவ்வகைச் செய்தியையும் வாசகர்கள் பராமுகமாக விடமுடியாத ஒரு தெளிவு; கூற வேண்டியதை உரிய முறைப்படி ஆணித்தரமாக ஒரே முறையில் கூறுவது இப்பத்திரிகைக்குரிய ஒரு சிறப்பம்சமாகும்

எச்செய்தியை எங்கு தேட வேண்டுமென்ற மயக்கம் என்றுமே வாசகர்கள் மனதில் ஏற்படாமல், அது மாநில மாவட்ட உள்ளூர்ச் செய்தியோ, வெளிநாட்டுச் செய்தியோ, அறிவித்தலோ, விளையாட்டரங்கோ, சுபநேரமோ எதுவாயுமிருக்கலாம், அவர்கள் தேடும் விடயம் 'அங்கேயே' இருக்கக் கூடியதான அமைப்பு; எந்த அவசர, அசௌகரியமான சூழ்நிலையிலும் கூடிய முக்கிய செய்திகளை மேல்வாரியாகத் தெரிந்து கொள்ளக் கூடிய தெளிவு என்பன இப்பத்திரிகையின் தனித்துவமான இயல்புகளில் சில.

உண்மை- அஞ்சாமை- நடுநிலைமையாகிய மூன்று விசேட இயல்புகளையும் ஒருங்கமையப் பெற்றவனே ஒரு சமுதாயத்தின் சிறந்த வழிகாட்டியாவான் இந்த நம்பிக்கையாற்போலும் சமாதானத்தை இழந்து தவிக்கும் எம் சமுதாயம் உருப்பெற அங்கலாய்த்து, இத்திரி இயல்புகளையும் அடிப்படையாகக் கொண்ட உதயனை ஒரு நம்பிக்கைத் தாரகையாகக் கணிக்கிறது.

இதற்கு முக்கிய காரணம், இப்பத்திரிகையில் ஆசிரியர் தலையங்கமானது தேவையற்ற பரபரப்பை மக்களிடையே உண்டாக்காமல் சமுதாயத்தில் நடைபெறும் ஊழல்களை மக்கள் உணராமல் செய்யும் தவறுகளை உணரவைக்கும் முறையிலும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையிலும் அமைவதேயாகும் அதோடு ஒரு தேசமக்களின் நிலைக் கண்ணுடியாக வர்ணிக்கப்படும் ஒரு பத்திரிகையின் உயிர்நாடி அதன் ஆசிரியர் தலையங்கமே என்பதை உணர்ந்து கற்றோரினதும், பொறுப்புள்ள பிரசைகளினதும் சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் வண்ணம் ஆராய்ச்சி நோக்கோடு எழுதப்படும் உதயனின் ஆசிரியர் தலையங்கங்கள் எம் பாராட்டுக்குரியன. பத்திரிகா தர்மம் எனக் கூறப்படுவது இதுவே.

**விடயத்துக்கு முக்கியத்துவம்**

மேலும் பத்திரிகைச் செய்தியாளர்கள் அந்தத்தத் துறையில்நாட்டமும் உரிய தகைமையுமுள்ளவர்களாகவும், உள்ளதை உள்ளபடி சரியான புள்ளி விபரத்தோடு விளக்கமாகக் கூறுபவர்களாகவும், தனி நபருக்கு முக்கியத்துவம் கொடுக்காது, விடயத்திற்கே முக்கியத்துவம் கொடுப்பவராகவும் இருப்பது, வளரும் உதயனில் காணப்படுவது உன்னதமானது. இது தொடர வேண்டியது முக்கியமாகும்.

ஒரு நாள், புரட்டாதி 15 ம் திகதி புதன்கிழமை பஸ்ஸில் எனக்குப் பக்கத்திலிருந்தவர் என் கையிலிருந்த உதயன் பத்திரிகையைப் பெற்ற சில விஞடிகளிலேயே திரும்பக் கொடுத்தார். ஆச்சரியத்துடன் பார்த்த என்னைப் புரிந்து கொண்ட அவர், 'இவ்வளவு விரைவில் வாசித்து முடித்து விட்டேனே என்று தானே யோசிக்கிறீர்கள்? முதல் கடைசிப் பக்கங்களின் தலையங்கங்களையும் முச்சந்தி முரளியின் கூற்றையும் வாசித்தால் விசேட செய்தியும், அதன் வியாக்கியானமும் புரிந்து விடுமே' என்றார்.

இக்கூற்றின் உண்மையை உடனேயே புரிந்து கொண்டேன். 'இன்று போய் நாளை வா'— கோட்டையில் ஒரு நாளைக்கு 25 பேருக்கே பென்ஷன் என்பது தலைப்புச் செய்தி. அதற்கு முரளி "ஷெல் விழுகிற நாட்டில் நாளை பென்ஷனுக்கு வாறது என்ன நிச்சயம்" என்று எழுப்பிய கேள்வி, வாசகர்களில் எல்லா மட்டத்தினருக்கும் உண்மை நிலையை விளங்க வைக்கும் ஒரு உபாயமாகும்.

இளம் உதயனில் துரித வளர்ச்சியை மட்டுமின்றி புதுமையையும் காண்கிறேன். கற்றோர் பெரியோர் தீர்க்கதரிசிகளின் சிந்தனைகளுக்கென 'உதய சங்கற்பம்' என்றும் வள்ளுவரின் கூற்றுக்குப் 'பொய்யாமொழி' என்றும் வெவ்வேறு இடம் வகுத்து ஒதுக்கப்பட்டுள்ளமை, அறிவு, ஒழுக்கம், அன்பு பண்பு ஆதியாம் நல்லியல்புகள் எம் இளம் பராயத்தினரிடையே படிப்படியாக அருகிக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் சாலவும் பொருத்தமுடையது

இவ்வாறன சிந்தனைகளும் கூற்றுக்களும் எம் சிறுர்களுக்கு நற்பயனை அளிக்க வேண்டுமாயின், அதற்குரிய வழிவகைகளை வகுப்பதும் உதயனைச் சார்ந்த கடமைகளிலொன்ருகும்.

தமிழறிவு, சமய அறிவு கட்டுரை வன்மையை உருவாக்கக் கூடிய போட்டிகளை நடத்துதல், சண்முகம் நினைவு தினக் கட்டுரைப் போட்டியைத் திறம்பட நடத்தி எல்லோரின் பாராட்டையும் தட்டிக் கொண்டது உதயனுக்குப் புதிதல்ல.

இவ்வகையான புதிய சிந்தனைகள், கல்வி முயற்சிகளைப் புகுத்துதல் உதயனின் சேவையைப் பூரணப்படுத்துவதோடு, மக்களின் உள்ளங்களில் மட்டுமல்ல இல்லங்களிலும் நிறைவையுண்டாக்கும் என்பது எனது நம்பிக்கை.

## உதய சங்கற்பம்

சிந்தனை செய்து வந்ததின் பயனால் தான் நாம் வாழ்கிறோம் எனவே நல்லவற்றையே சிந்தனை செய். தவறிவிடாதே.
— சுவாமி விவேகானந்தர்.

## நாளும் உருவாகி---

(8ம் பக்கத் தொடர்ச்சி)
இறது ஒரு குரல்
'மடார்' என்று ஒரு ஓசை, வானம் இடிந்து விழுந்தது போன்று
முணுமுணுப்பு நிற்கிறது கைகால்கள் ஓடவில்லை
வெளியே போன அலுவலகச் செய்தியாளர் பறந்து ஓடி வருகிறர், வெடித்த ஷெல்லில் இருந்து பறந்து வரும் ஷெல்துண்டு போல
ஷெல் விழுந்து நாலு பேர் சரி... பலபேருக்குக் காயம்'— இப்படிச் சொல்லி விட்டு விவரம் எடுக்கப் போகின்றர்
லீட் தயார்' என்று உற்சாகமாகக் குரல் கொடுக்கப்படுகிறது
'லீட்' செய்திக்குக் கோட்டை கை கொடுக்கிறது
அந்த நேரம் பார்த்து 'பவர் கட்' மெழுகுதிரி ஏற்றப்படுகிறது
எந்தப் பக்கத்திலும் 'பவர் கட்'தான் ஷெல் விழுந்ததில் வயர் அறுந்து விட்டதாம்
வர கொஞ்சம் நேரமாகும்— இப்படி மின்சார பகுதி சொல்கிறது.
இச் சந்தடியில்......... அருகில் இருந்து ஒரு குரல்...
ஓவராகப் போகிறது'-
'கிரிக்கட் ஞாபகமோ'-
'இல்லை கொப்பிகள் கூடி விட்டன. எதை நிறுத்துவது என்று தெரியவில்லை'—
'கொம்போஸிங்' பிரிவு சுறுசுறுப்படைகின்றது. ஷெல் சத்தம் வருதா என்று காதை நீட்டிக் கொண்டு கண்ணைக் கூர்மையாக்கி எழுத்தோடு எழுத்தைச் சேர்க்கின்றனர்
கண்ணுக்குள் எண்ணை ஊற்றிக் கொண்டு 'புரூப் ரீடர்கள்' பிழை திருத்துகின்றனர்
முதல் நாள் நடப்பு விவகாரங்கள் சுருப்பு— வெள்ளையில் பதிவாகி 'உதயன்' நாளிதழாக 'டெலிவரி' ஆகிறது.
தினமும் பிரசவ வேதனைதான்
ஆசிரியபீடம், அச்சுக்கோர்க்கும் பிரிவு, அச்சுப்பதிவு மூன்றும் இணைந்து துரித கதியில் வேலை செய்கின்றன
அப்போதுதானே 'உதயன்' உதயவேளையில் வெளிவரமுடியும்!



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:
6-4-1935

உதிர்வு:
19-11-1984

திதி: 27-11-86

திருவாட்டி மங்களம்மா விஜயதர்மரத்தினம்

எமது இல்லற ஜோதி அணைந்து இரு ஆண்டுகள் மறைந்தும் உங்கள் அன்புப நினைவும் எங்கள்உள்ளத்தை விட்டுஎன்றும் அணையாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரப் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

'மங்களாலயம்'
54, வன்னியசிங்கம் வீதி,
தெல்லிப்பளை மேற்கு,
தெல்லிப்பளை.

கணவன்,
பிள்ளைகள்,
உற்றர்,
உறவினர்

## அர்த்தமே அது--

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)
அதிகம் சாதிக் லாதவது ஏறகிய கால பத்திரிகைத்தொழில் அனுபவத்தில் இதைப் படித்துக் கொண்டேன்

சில மாதங்களுக்கு முன் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் செயலாளரை சந்தித்த போது; சட்டவிரோத மின் பாவனையால் பெரும் நஷ்டமும் கஷ்டமும் ஏற்பட்டிருப்பதைக் கூறிக் குறைப்பட்டார் பத்திரிகை மூலமாக எது பணி செய்யும்படி கேட்டுக் கொண்டார்.

இச்செய்தியை மறுநாள பத்திரிகையில் பிரசுரித்ததோடு, எமது பிரதம ஆசிரியர் ஓர் ஆசிரியத்தலையங்கமும் எழுதியிருந்தார்

அதைத் தொடர்ந்து சட்டவிரோத மின் பாவனையை தடுப்பதற்கான, சட்டவிரோத மின்கம்பிகள் எரிப்புச் செய்தியை முக்கியப்படுத்தி முன்பக்கத்தில் அவர் பிரசுரிக்கச் செய்தார்.

இரு மாதங்களில் சட்டவிரோத மின் பாவனை அரைமடங்காகக்குறைந்ததைச் சுட்டிக் காட்டி எமக்குத் தமது நன்றியையும் பாராட்டுதலையும் சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவித்தார்.

அப்போது என்னை அறியாமலே ஒரு மன நிறைவு. ஆயுதத்தால் சாதிக்க முடியாத ஒரு விவகாரத்தைப் பேனுவால் சாதிக்க முடிந்ததை எண்ணிப் பெருமைப்பட்டேன்

பத்திரிகைத் தொழில் பெறும் சம்பளத்துக்கான தொழில் அல்ல அது ஒரு சமூகத் தொண்டு அதனைச் சரிவரச் செய்ய வண்டும்' என்று எமது பிரதம ஆசிரியர் அடிக்கடி கூறுவதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்டேன்.

## மக்கள் மதிப்பு பெற்றவன்

வயதிற் குறைந்தாலும் அறிவிற் சிறந்த திருஞானசம்பந்தப் பிள்ளைபோல் உதயன் ஒரு வயசு பூர்த்தியானாலும் அறிவுமிக்க திருக்குறள், கட்டுரைகள் புதினங்களையும் வெளியிட்டு மக்கள் நன்மதிப்புப் பெற்ற பத்திரிகைகளில் ஒன்றென விளங்குகின்றது.

இப்படியான தரம் வாய்ந்த மதிப்பிற்குரிய உதயன்இன்னும் பல்லாண்டு காலம் மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென விரும்புகிறோம்

க. கனகராசா ஜே.பி.

## பத்திரிகையின்---

(3ம் பக்கத் தொடர்ச்சி)
ஈழத்தமிழின பல்வகைப் பிரச்சினைகளை வெளியிட்டு, ஆசிரியர் தலையங்கம் பிரசுரிக்கப்படுவதை மக்கள் படித்து வருகிறர்கள் எல்லாப பத்திரிகைகளையும் படிக்கும் பழக்கம் இன்றைய சூழலிற் பரவலாக இடம் பெறுகின்றது.

எனவே நாள்தோறும் வெளிவரும் பத்திரிகைகளைப் படித்து அவற்றின் மதிப்பீட்டினைப் பொது மக்கள் செய்து வருகிறர்கள். இந்த வகையில் உதயன் பத்திரிகையும் ஓராண்டு நிறைவுபெற்றுத் தொடர்ந்து பணியாற்றும்போது அதன் பங்களிப்பினை மதிப்பிடுவது பொதுமக்களின் பொறுப்பாகும். உதயன் பத்திரிகை செவ்வனே பத்திரிகைத் தொண்டினைச் செய்து வருகின்றது என்பது மக்கள் தீர்ப்பைப் பொறுத்ததாகும்

என்னைப் பொறுத்த வரையில் இப்பத்திரிகை கடந்த ஓராண்டு காலத்திற் பத்திரிகைப் பணியைச் செம்மையுற ஆற்றி வந்திருக்கின்றதெனக் கூற விரும்புகின்றேன். வருங்காலத்திலும் இத்தகைய பணியைச் செம்மையுறச் செய்வதற்கு இறைவன் அருள் செய்வாராக.

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
திரு சிவகுரு கைலாசபிள்ளை
அவர்கள்

தோற்றம்;
ஆவணி 20
1901

மறைவு
கார்த்திகை 22
1985

திதி:- கார்த்திகை அபரபக்க ஏகாதசி
நல்லதேடுநற்பதந்தன் நடைதனை மறந்ததுவோ
சொல்லு திரு வாதவூர் நூல் துதித்திடவும் அயர்த்தீரோ
வெல்லரிய வீரபத்திரகாளிதலம் விட்டீரோ
அல்லலிந்த வாழ்வென்று அரன்தாள் அணுகினீரோ
எமக்கெல்லாம் வாழவழிகாட்டிக் குறையா வாழ்வும்
நலியாப் பேரும் படைத்து அமரத்துவம் அடைந்த எங்கள்
அன்பிற்குரிய குடும்பத் தலைவரைக் கண்ணீரோடு நினைவு கூருகின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
திருநெல்வேலி.

உதயனுக்கு பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்!



லீலா பேக் ஹவுஸ்
ஸ்தாபனத்தாரின்
பிஸ்கட்டுக்களைச் சுவைத்து மகிழுங்கள்
லீலா பிஸ்கட்டுக்கள்
ஒரு தமிழ் ஈழத் தயாரிப்பு.
கைதேர்ந்த தொழில்நுட்ப வல்லுநர்களால்
நல்ல தரமாகத் தயாரிக்கப்பட்டவை.
எமது தயாரிப்புக்கு நீங்கள் தரும்
பேராதரவுக்கு நன்றி!

AUM
LEELAA BAKE HOUSE
லீலா பேக் ஹவுஸ்
மார்க்கட் சதுக்கம், சங்கானை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியிட்ட திகதி: 27-11-1986
Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15, Second Lane, Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number QJ 6 ON 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org